அரசு வெளியீடு

ஹாபிஸ் எம். கே. செய்யது அஹமது

# முஸ்லிம் தமிழ்ப் பாரம்பரியம்

# முஸ்லிம்
# தமிழ்ப் பாரம்பரியம்

ஹாபிஸ்
எம். கே. செய்யிது அஹமது

அரசு வெளியீடு,
231, ஆதிருப்பள்ளித் தெரு,
கொழும்பு-13, (இலங்கை).

அரசு வெளியீடு: 16

முதற்பதிப்பு: ஜூலை, 1968

விலை: ரூ. 4-75

# MUSLIM THAMIL PARAMPARIYAM

(The Heritage of Muslim Tamils)


Author: ALHAFIZ M. K. SYED AHMED

Publisher: ARASU PUBLICATOINS,
231, Wolfendhal Street,
Colombo-13, (Ceylon).

First Edition: July, 1968.

Price: Rs. 4-75

ரெயின்போ பிரிண்டர்ஸ், 231, ஆதிருப்பள்ளித் தெரு, கொழும்பு-13.



இந்நூல்

8-4-64-ல் மறைந்த

எந்தை

அல்ஹாபிஸ் செ. யி. முஹம்மது அப்துல்
காதிறு ஹாஜியார் அவர்களுக்கு

என்

அன்புக் காணிக்கை.

# பதிப்புரை

உணர்ச்சிகளின் மெல்லிய சுருதி பேதங்களைத் துல்லியமாக உணர்ந்து, அவற்றை நேர்த்தியாகச் சித்திரிக்கவல்லவன் இலக்கியகாரன். ஆனால், இலக்கியப் படைப்புப் பணியில் ஈடுபடுகையில் உணர்ச்சி வசப்படா திருத்தல் அவன் தர்மம். அந்த உயர்ந்த தர்மத்திற்கு உடைவு ஏற்படக்கூடிய உணர்ச்சி நிலையில், இந்தப் பதிப்புரையை எழுத அமர்ந்திருக்கின்றேன். அரசு வெளியீடுகளாக வெளிவந்துள்ள ஏனைய பதினைந்து நூல்களுக்கும் பதிப்புரை எழுதிய பொழுது இந்த அனுபவம் ஏற்பட்டதில்லை என்பது சத்தியம். தர்மத்தின் உடைவு, நான் சத்தியமெனவரித்துள்ள ஒன்றிலே தொங்கிக்கொண்டிருப்பதுதான் எனக்கு வேதனையைத் தருகின்றது.

தர்ம உடைவுக்குக் காரணன் நானல்லன். காரணர்கள் கல்விமான்களாகவும், பெரிய பதவிகளிலே அமர்ந்திருப்பவர்களாகவும் இருப்பதுதான் மிகவுங் கசப்பானது. கல்வியின் தளத்தை மறந்து, பதவியின் பண்பைத் துறந்து அவர்கள் அறம்புறமாகப் பேசத் தலைப்பட்டுள்ளார்கள். 'சைவமுந் தமிழும் இணை பிரியாதன; இரண்டும் ஒன்றினை ஒன்று தழுவியே வளர்ந்தன-வளர்வன' என்று போர் முரசறைந்து அரற்றி வருவதைத்தான் குறிப்பிடுகின்றேன். பௌத்த சிங்கள வாதத்திலும் பார்க்க, இந்த மனக் குறுக்கக் கூச்சல்களினாலே தமிழ் பேசும்

இனத்திற்கும், தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் பாரதூரமான பாதக விளைவுகள் ஏற்படுமென அஞ்சுதல் நியாய பூர்வமானதாகும்.

சான்றோர்களான செந்நாப் புலவர்கள் தமிழ் செய்த சங்க காலத்திலேகூடத் தமிழும் சைவமும் இரட்டைக் குழந்தைகளாக ஒட்டிக் கிடந்தன என்பதற்கு வரலாற்றிற் சான்றுகள் கிடையா. தமிழறிஞர்கள் கம்பராமாயணத்தையும் திருக்குறளையும் தமிழின் 'கதி' யெனச் சிறப்பித்துக் கூறுதல் சால்பு மிகு வழக்கு. கம்பராமாயணம் வைஷ்ணவ மதத்தவரின் படைப்பு. சமணப் புலவரின் படைப்பே திருக்குறள். ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றிலே தானுஞ் சைவம் புகுந்தது கிடையாது. தமிழ் மொழியினதும், இலக்கியத்தினதும் வரலாற்றிலே நுணிப்புல் அறிவுடையவர்கள்தானும் சைவம் புகாமலே தமிழ் நற்கதியடைந்து துலங்குகின்றது என்ற முடிவுக்கு வருதல் தவிர்க்க முடியாததாகும். சதுரகராதி, எழுத்துச் சீர்திருத்தம், ஒப்பிலக்கணம், மொழி ஒப்பியல், நவீன இலக்கிய உருவங்களும் வகைகளும் ஆகியன சைவத்தின் மூலமே தமிழிற்புகுந்தன அல்ல. எந்த வக்கிர புத்திக்காரனாலும் அவ்வாறு நிறுவவும் முடியாது. பவனந்தி முனிவர், புத்தமித்திரனார், உமறுப் புலவர், வீரமா முனிவர், கால்ட்வெல் ஐயர், போப் ஐயர், சுவாமி ஞானப்பிரகாசர் என நீளும் மாற்று மதஞ் சார்ந்த பெரியோர்கள் தமிழின் செழுமைக்கு ஆற்றிய தொண்டுகள் அளப்பரியன. அவற்றை வசதிக்காக மறந்தோ, வேண்டுமென்று புறக்கணித்தோ பேசுதல் செய்ந்நன்றி கொன்ற செயலாகும்.

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு'

என்றான் தமிழ் மறை தந்த வள்ளுவனும். அறத்தை மறந்து அழிவழக்காடத் துணிந்துள்ள பெரியவர்கள் இவ்வுண்மைகளைத் தழுவிச் சிந்திப்பார்களாக!

பல்வேறு சமயங்களைச் சார்ந்த தமிழ்ப் புலவர் பெருமக்கள் ஆற்றியுள்ள தமிழ்ப் பணியைப் பற்றிய தனி நபர் ஆராய்ச்சி நூல்கள் சில தமிழகத்திலிருந்து வெளிவந்துள்ளன; மகிழ்ச்சிக்குரியது. ஆனால், முஸ்லிம் பெருமக்கள் ஆற்றிய தமிழ்ப்பணி குறித்து விரிவான நூல்கள் உரிய அளவிலும் வகையிலும் வெளிவந்தில. அவர்களுடைய தமிழ்ப்பணி மறைக்கப்பட்டு, மறுதலிக்கப்படும் ஒரு போக்கு அண்மைக் காலத்திற் கிளைத்து வருவதையும் அவதானிக்க முடிகின்றது.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பதை உயர் நெறியாக ஒப்பியவன் தமிழன். நாடு-இனம்-மதம்-குலம்-கோத்திரம் என்ற வகையில் அமைந்துள்ள எல்லைகளை, தமிழன், தமிழ் செய்யும் பணியிற் பாராட்டியது கிடையாது. தமிழ் செய்யும் மனம் உலகளாவியதாகச் செம்மையுற்றிருந்தது. உலகில் எழுந்த அத்தனை பிரதான சமயங்களுக்கும் தமிழ் என்னும் சங்கப் பலகை சரியாசனமளித்தது. இந்த விழுமிய பாரம்பரியத்தின் நேர்த்தியைப் பிரதிபலிக்கும் முகமாகவும் அரசு வெளியீடு நிறுவப்பட்டது. கடந்த ஏழு ஆண்டுகளாக இந்த இலட்சியப் பயணம் தொடர்கின்றது. நவமான இலக்கியப் படைப்புக்களை நூலாக்குவதில் எப்படி எனக்குக் கரிசனம் இருக்கிறதோ, அவ்வாறே நேரிய இலக்கிய வரலாற்றை எடுத்தியம்பும் நூல்களை வெளியிடல் வேண்டும் என்பதிலும் அக்கறை இருக்கின்றது. இதன் காரணமாகத்தான் அரசு வெளியீடு வரிசையில் ஆறுவது நூலாக இரசிகமணி கனக செந்திநாதன்

அவர்கள் எழுதிய ஈழத்து இலக்கிய வளர்ச்சியை வெளியிட்டேன். அந்நூலில் 'முஸ்லிம் எழுத்தாளர்கள்' என்னும் தனிப் பகுதியும் இடம் பெற்றது. தமிழ் இலக்கிய வளர்ச்சி என்ற படுதாவில், முஸ்லிம்களாற்றிய தமிழ்த் தொண்டினை ஒப்பிட்டுப் பார்க்கத் தக்க குறிப்புக்கள் அதில் இடம் பெற்றன.

என்னை நிர்வாக ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் இளம்பிறை ஈழத்து இலக்கிய வரலாற்றில் முதன்முதலாக மறுபிரசுரத் திட்டம் ஒன்றினை வகுத்தது. இத்திட்டத்தின் முதல் மறுபிரசுரமாக தமிழ் வளர்த்த முஸ்லிம்கள் என்னும் கட்டுரை வெளிவந்தது. அக்கட்டுரையை எழுதியுதவிய ஹாபிஸ் எம். கே செய்யிது அஹமது அவர்கள் சற்றே விரிவாக எழுதியுள்ள முஸ்லிம் தமிழ்ப் பாரம்பரியம் என்னும் இந்நூலை அரசு வெளியீட்டின் பதினாறுவது நூலாக வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். முஸ்லிம்கள் ஆற்றியுள்ள தமிழ்த் தொண்டினை விரிவாக ஆராய்வதற்குப் பயன்படத் தக்க பல குறிப்புக்கள் இதில் விரவிக்கிடக்கின்றன. இந்நூலில் இடம் பெறும் சில கருத்துக்கள் முடிவுகளல்ல. முடிவுகளைக் கண்டு பிடிக்க உதவும் கோடிகள் என்றுகூடச் சொல்லலாம்.

•

முஸ்லிம் மக்களுடைய இலக்கியத் தொண்டு என நான் வகுத்துக் கூறுவது குறுகிய நோக்கங் காரணமாக அன்று என்பதை அரசு வெளியீடுகள் சம்பந்தப்பட்ட இலக்கியப் பணியை அறிந்தோர் அறிவர். எல்லா மதத்தவரும் தமிழ் செய்த வரலாறுகள் தனித் தனியாகத் தொகுக்கப்பட்டு ஒன்று திரட்டப்படும் பொழுதுதான் உண்மையான பெறு பேற்றினைத் தரிசிக்க இயலும் என்பதை யாவரும் ...க் கொள்...வர்.

வர்த்தகப் பிரமுகராக இருந்து கொண்டே தமிழ்ப்பணி— இலக்கியம்— கலை-வரலாறு- ஆராய்ச்சி ஆகிய பல தரப்பட்ட துறைகளிலெல்லாம் ஈடுபாடுடைய விந்தை மனிதராக நம் மத்தியில் வாழும் ஹாபிஸ் எம். கே. செய்யிது அஹமது அவர்களுடைய இந்தக் கையடக்கமான நூல் நீண்டகாலத் தேவை ஒன்றினைப் பூர்த்தி செய்கின்றது. அத்துடன், வரலாற்று மாணுக்கரின் ஆர்வத்தை உரிய துறையிலும் முறையிலுந் தூண்ட உதவுவதுடன், விரிவான நூல்கள் இத்துறையிற் சமைக்கப்படுவதற்குக் கால்கோளாகவும் அமையுமென நம்புகின்றேன்.

எம். ஏ. ரஹ்மான்
அரசு வெளியீடு,

The two research papers entitled HERITAGE OF TAMIL MUSLIMS and MUSLIMS' *CONTRIBUTION TO TAMIL* LITERATURE which I submitted to the First Interanational Tamil Research Conference - *Seminar held in* Malaysia in 1966, form the nucleus of this book.

**—Hafiz M. K. *Syed Ahmed***

# என்னுரை

உலகிலே தோன்றிய ஆதி மனிதன் தமிழனென்றும், முதலில் ஏற்றம் பெற்ற மொழி தமிழென்றும் வலுவான கருதத்தொன்று சரித்திர ஆய்வாளர் மத்தியில் நிலவுகின்றது. இஸ்லாமிய வேத நூலிலும், வேறு வேத நூல்களிலும் ஆதிபிதா ஆதம் (அலை) [ஆதாம்; Adam] என்றும், ஆதி மாதா ஹவ்வா (அலை) [ஏவாள், Eve] என்றும் கூறப்பட்டுள்ளன. ஆதம் (அலை) இலங்கையிலும், ஹவ்வா (அலை) அறபு நாட்டிலும் முதன் முதலாக இறங்கினூர்கள் என்பதும் பொதுவாக நிலவி வரும் நம்பிக்கையாகும்.

உலக ஆரம்ப காலத்திலே பல நாடுகளும் கடலாற் பிரிக்கப்படாது ஒன்றுடன் ஒன்று இணைந்திருந்தன என்பது புவி முகட்டமைப்பியல் ஆராய்வாளர் கருத்தாகும். அவ்வாறே பரத கண்டமும் இலங்கையும் தொன்மைமிகு காலத்தில் ஒரே நிலப்பரப்பாக இணைந்திருந்தன என்றும் கருதுகின்றனர். மறைந்த குமரிக் கண்டம் பற்றியும், அக்கண்டத்தில் எஞ்சிய பகுதிகள் இலங்கையும் தமிழகமும் என்பது பற்றியும் அறிஞர்கள் பலரும் எழுதியிருக்கிறூர்கள். முதல் மனித தம்பதிகளின் குலக்கொழுந்துகளான ஹாபீல், காபீல் ஆகியோரின் கல்லறைகள் தமிழகத்திலுள்ள ராமேஸ்வரத் தீவில் இடம் பெற்றன என்றும் வரலாற்று நூலார் எழுதி

வைத்துள்ளார்கள். இத்தகைய அபிப்பிராயங்களைத் திடமாக நிலைநாட்ட மேலும் பல விரிவான ஆராய்ச்சிகள் நடத்தப்படல் வேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயமாகும்.

எஃது எவ்வாறிருப்பினும், தமிழும் அறபும் தொன்மைசால் மொழிகள் என்பதும், பன்னெடுங் காலமாக இவ்விரு மக்கள் கூட்டத்தினருக்குமிடையிலே நெருங்கிய தொடர்புகள் இருந்து வந்தன என்பதும் சரித்திர வரலாற்றுக்குட்பட்ட செய்திகளாலும் நிருபணமாகியுள்ளன.

தமிழ் கூறும் நல்லுலகம் பரந்துபட்டது; அறபு நாகரிகம் காலூன்றிச் செழுமையுறும் உலகமும் விரிந்துபட்டது. அறபு நாடுகளின் கரைகளிலே தமிழ் மரக்கலங்களும், திராவிட நாகரிகம் பரம்பிய நாடுகளின் துறைமுகங்களில் அறபு நாவாய்களும் போக்குவரத்துச் செய்தன.

தமிழ் வணிகம் மிக உச்சம் பெற்றிருந்த 13-ம் நூற்றுண்டில், அறபு நாட்டில் உலகப் பாதுகாவலர் மன்றம் என்ற பெயரில் ஓர் உலக மாமன்றம் இருந்தது. அம் மாமன்றத்திலே தமிழகமும் அங்கம் வகித்தது. தென்பாண்டி நாட்டை அரசோச்சிய அறபி வேந்தன் ஒருவன் அம் மாமன்றத்தின் தலைவராகச் சில காலம் பதவி வகித்துச் சிறப்பித்தான். இத்தகைய பல சுவையான தகவல்கள் அக்காலத்தில் எழுந்த சரித்திர ஏடுகளிலே காணப்படுகின்றன. பிற்காலத்தில் எழுதப்பட்ட சரித்திர நூல்களிலே இச் செய்திகள் விடுபட்டுப்போனமை விசனத்திற்குரியதே. சொந்த விருப்பு வெறுப்புகளை உட்புகுத்தாது, சம்பவங்களை நிகழ்ந்தவாறு (வேண்டுமாயின், அவற்றைப் பற்றிய விமர்சனத்தில் தமது அபிப்

ராயங்களைக் கூறி) குறிப்பதுதான் வரலாற்று ஆசிரியரின் உயர் மரபாகும். இந்த மரபிற்கு இசைந்தொழுகியே 13-வது நூற்றாண்டின் வரலாற்றாசிரியர்களான றஷீதுத்தீன், வாஸிப், இப்னு பதூதா ஆகியோர் வரலாற்றை எழுதினார்கள். இவர்களுடைய எழுத்துக்கள் பிற்காலத்தில் ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

மார்கோபோலோ மத்திய காலத்தின் புகழ்மிகு யாத்திரிகராவர். அவர் தமது யாத்திரை அனுபவங்களைத் தமது சுய மொழியில் எழுதியதை, கர்னல் ஹென்றீ யூல் ஆங்கிலப்படுத்தியுள்ளார்.

இத்தகைய பழைய நூல்களில் இருந்தும், வேறும் பல கருவூலங்களிலிருந்தும் தகவல்களைச் சேகரித்துத் 'தமிழ் கூறும் முஸ்லிம் நல்லுலகம்' என்ற தொடரிற் பல கட்டுரைகளை எழுதினேன். 'An Arab King of Pandya' என்ற என் ஆராய்ச்சிக் கட்டுரை சென்னையிலிருந்து வெளிவரும் 'ஹிந்து' என்ற ஆங்கிலத் தினசரியில், 1940-ம் ஆண்டில் வெளிவந்தது. வரலாற்றுத் துறையில் ஆர்வமுள்ள சிலர் என்னுடைய கட்டுரையை வாசித்து, நான் துணிவுடன் சமர்ப்பித்த புதிய தகவல்களை வரவேற்றுப் பாராட்டினார்கள். வேறு சிலர் மறுப்பும் தெரிவித்தார்கள். இவ்வாறு கிடைத்த பாராட்டும் எதிர்ப்பும் வரலாற்றுத் துறையில் மீண்டும் ஆழமாக ஈடுபடும் ஆர்வத்தை எனக்கு நல்கிற்று.

டாக்டர் பாஸில் அவர்கள் வெளியிட்ட Islamic South (இஸ்லாமிய தென்னகம்) என்ற நூலில் 'The Suzerainty of Arabs over Chola-Pandya' (சோழ-பாண்டிய நாட்டில் அறபிகளின் மேலாதிக்கம்) என்ற தலைப்பில் என் நீண்ட ஆய்

வுக் கட்டுரை இடம் பெற்றது. ஆங்கிலத்தில் வெளிவந்ததைத் தமிழில் நூலாக்கித் தரல் வேண்டு மெனப் பலரும் கோரினர். அதன் பலன்தான் 'வான் புகழ் காயல்பட்டணம்' என்ற எனது நூல். அந் நூலுக்குச்'சுதேசமித்திரன்','தாருல் இஸ்லாம்', ஆகிய சஞ்சிகைகளும், இலங்கை வானொலி ஆகியன வும் செய்த விமர்சனங்களினாலும், அது சமயம் பாரத நாட்டின் கவர்னர் ஜெனரலாகப் பதவி வகித்த ராஜாஜி போன்ற அறிஞர்களின் பாராட்டு தல்களினாலும் இத் துறையில் மேலும் ஊக்க மடைந்தேன்.

எனது மதிப்புக்குரிய அன்பர் பூபதிதாஸர், தற் போது சுவாதீன பத்திரிகா சமாஜத்தின் தமிழ்ப் பகுதிப் பொறுப்பாளராக இருக்கும் எனதருமை நண்பர் எஸ். டி. சிவநாயகம் ஆகியோருடைய பெரு விருப்பிற் கிணங்க'தமிழ் கூறும் முஸ்லிம் நல்லுலகம்' என்ற தொடரில், என் ஆய்விற் கண்ட உண்மைகளை 'வீரகேசரி'யிற் சில வருட காலமாக எழுதினேன். தற்பொழுதும் 'வீரகேசரி' ஆசிரியராகக் கடமை யாற்றும் கே. வி. எஸ். வாஸ் அவர்கள் இதிற் காட் டிய சிரத்தையை நான் மறப்பதற்கில்லை. இதனையும் ஒரு நூலாக்கும் விருப்பம் எனக்கு உண்டு.

1966-ம் ஆண்டில் மலேஷியாவில் நடைபெற்ற முதலாவது அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மகா நாட்டுக் கருத்தரங்கிற் பங்குபற்றும் படியும், ஆய் வுக் கட்டுரைகளை ஆங்கிலத்தில் எழுதி அனுப்பும் படியும் மாநாட்டுக் குழு முதல்வர் எனக்கு எழுதி யிருந்தார். அதற்கிணங்க Heritage of Tamil Muslims (தமிழ் முஸ்லிம்களின் பாரம்பரியம்) Muslims' Contribution to Tamil Literature (தமிழ் இலக்கி யத்தில் முஸ்லிம்களின் பங்கு) என்ற இரு கட்டுரை

களை எழுதி அனுப்பினேன். மநாட்டிற்குச் சென்று என் கட்டுரைகளை வாசிக்கும் வாய்ப்புப் பல காரணங்களால் எனக்குக் கிட்டவில்லை. எனினும், அக் கட்டுரைகளைத் தமிழ் நூலாக்கித் தரல் வேண்டுமென ஆர்வம் மிக்க நண்பர்களும், கலையன்பர்களும் விருப்பம் தெரிவித்தனர்.

செற்பசிக்கு இலக்காகி மறைந்து கொண்டிருக்கும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களின் திருந்திய புதுப் பதிப்புக்களைக்கொணர்ந்து தமிழ்ப் பணிபுரிதல் வேண்டுமென்பது என் நெடுங்கால அவா. இந்த நன் முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் வகையில் ஓய்வு பெற்ற சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி அல்ஹாஜ் பஷீர் அஹமது ஸயீத் சாஹிப் எம். ஏ. பி. எல். போன்ற கலையுள்ளங் கொண்ட பிரமுகர்கள் பலர் எழுதியிருந்தார்கள்.

சந்தர்ப்பச் சூழ் நிலைகளாற் காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டு செல்வதை உணர்ந்த என் நண்பரும், அரசு வெளியீடு அதிபருமாகிய எம். ஏ. ரஹ்மான் அவர்கள், உள்ள தகவல்களை முன்னோடி நூலாக வெளியிடல் வேண்டுமென்று விடாது கேட்டுக் கொண்டார். இதன் பயனாக, எனது மலேஷியக் கட்டுரைகளையும், தமிழ் முஸ்லிம் புலவர் பற்றித் தொகுத்து வைத்திருந்த தகவல்களின் நாமாவளியையும் இணைத்து இந் நூல் வெளிவருகின்றது. இதிலே காணப்படும் அடிப்படைத் தகவல்களை ஆதாரமாகக் கொண்டு வெகு சீக்கிரம் ஒரு முழு நூல் வெளிவர இறை அருள் கிடைக்குமாக! இந் நூலை உரிய காலத்தில் அச்சிட்டுப் பதிப்பித்துத் தந்த என்னருமை நண்பர் எம். ஏ. ரஹ்மான் அவர்களுக்கும், இக் கலைப்பணியில் எனக்குப் பல வகைகளிலும் துணை புரிந்த ஈழத்தின் தலைசிறந்த

எழுத்தாளர் திரு. எஸ். பொன்னுத்துரை பீ. ஏ. அவர்களுக்கும் என் உளங்கனிந்த நன்றிகள். என் இலக்கியப் பணிக்குப் பெருந் துணையாக நின்ற தெல் தொட்டை ஜனாப் ஆ. பி. நூ. அல்லா பிச்சையையும் நான் மறப்பதற்கில்லை. என் ஆராய்வுக்குத் தேவை யான பல மூல நூல்களையும், பல அரிய குறிப்புக் களையும் அரிதிற் சேகரித்துத் தந்தார். அவருக்கும் என் மனப்பூர்வமான நன்றிகள்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற முதுரை பகரும் சமத்துவ சங்க நாதம் உலகனைத்தி லும் முழங்க வேண்டும். தமிழ் மலர் பூத்து குலுங்கி, அதன் சுகந்த மணம் உலகமெங்கும் 'கம கம' என்று கமழ வேண்டும். தமிழ் உலகத்தையும், அறபு உலகத்தையும் பல வகைகளிற் பிணைக்கும் இத் தகைய நூல்கள் பல வெளிவர தமிழ் உலக அறபு உலக நாடுகளிலுள்ள எல்லா அரசுகளும் ஒரு முக மாக முயன்று, கலைப் பாலத்தை உருவாக்க வேண் டும். தமிழ் முஸ்லிம்கள் தமிழை வளர்த்தது போன்று அறபியையும் வளர்த்துள்ளார்கள். அறபு இலக்கி யத்துக்குப் பணிபுரிந்த தமிழ் முஸ்லிம்கள் பற்றிய கருவூலங்களும் வெளிவரல் வேண்டும். தமிழ் முஸ் லிம்கள் தமிழ் மொழிக்கு மட்டுமன்றி தமிழ் நாட் டுக்கும் புரிந்த வீர தீர தேசபக்திமிக்க பணிகளையும் உலகறியச் செய்தல் வேண்டும். இப்பெரும் பணிக்கு இந்நூல் முன்னோடியாக விளங்கவேண்டு மென் பதே என் ஆசை. வாசக நேயர்களின் ஆக்கபூர் வமான ஒத்துழைப்பையும், இறை அருளையும் ஆசிக் கிறேன்.

கலை அன்பன்,

**எம். கே. செய்யிது அஹமது.**

பண்ணை அகம்,
34, கடை வீதி,
மட்டக்களப்பு.
28-6-68.

# தமிழ் முஸ்லிம்களின் பாரம்பரியம்

'மாபர்' அல்லது 'மாபிர்' என்பவை 'மிஃபர்' என்ற அறபிப் பதத்தின் திரிபுச் சொற்கள். பாதை, வழி என்பன இதன் பொருள்கள். பண்டைய அறபிகள் சோழமண்டலக்கரையை இப்பெயர் கொண்டே அழைத்தனர். இக்கரை, இலங்கைக்கு மிக அண்மையில் அமைந்து, இலங்கைக்கும் தூர கிழக்கு நாடுகளுக்கும் இவ்வழியாகவே கப்பல் போக்குவரத்துகள் நடைபெற்றுக்கொண்டிருந்ததன் காரணத்தாலும், இந்தியத்துணைக்கண்டத்திலிருந்து இலங்கைக்குச் செல்லும் நடுவழியாகவும் இவ்வழியாகச் செல்வது மிக சௌகரியமாக இருந்ததாலும் இப்பெயர் ஏற்படலாயிற்று. கன்னியாகுமரி முனையிலிருந்து 'நெல்லூர் வரையுள்ள மாநிலம்[1] முழு

1 "'கொல்லத்திலிருந்து நெல்லூர் வரை 'மாபர்' 300 'பரஸங்' கரையோரமாக நீண்டு கிடக்கிறது என றஷீதுத்தீன் தமது 'ஜாமி-உத் - தவாரி'கில் கூறுகிறார்" —ஸர். எச். எம். எலியட்— 'இந்தியா சரித்திரம்' 1867 புத்தகம் 1 அத்தியாயம் 7 பக்கம் 42" "கொல்லத்திலிருந்து நெல்லூர் வரை நீளத்தில் 'மாபர்' கடற்கரையோரமாக 300 'பரஸங்' நீண்டுகிடப்பதாக வஸப் தமது 'தஸ்ஜியதுல் அம்ஸார் வதற்ஜியதுல் அஃஸார்' நூலில் எழுதியுள்ளார்" —ஸர். எச். எம். எலியட் - இந்தியா சரித்திரம் 1871-புத்தகம்3 பக்கம் 32. அபுல் பிதா என்ற வரலாற்று ஆசிரியர் மலபார் முடிவதும் மாபர் தொடங்குவதும் குமரி முனையிலே என்று எழுதியுள்ளார். இக்கூற்று முற்றும் சரி. ஒரு 'பரஸங்'குக்கு 3½ மைல்.

வதையுமே—சுருங்கக் கூறின் சோழ பாண்டிய ராஜ்யங்கள் முழுவதையுமே—இது பிற்காலத்தில் குறிப்பதாயிற்று. 'மிஃபர்' என்ற இந்த அறபிச் சொல் அனேக உறுதிகளிலும், அறபி நூல்களிலும், ஒரு காலத்தில் பாண்டியம்பதியின் தலைமை இடமாக விளங்கிய காயல்பட்டணத்திலுள்ள சமாதிகளில் காணப்படும் அறபி கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்டுள்ள இரங்கற்பாக்களிலும் காணப்படுகிறது.[1]

அப்துல்லதீப் என்பவர் பதின்மூன்றும் நூற்றுண்டிலுள்ள புகழ் மிக்க வரலாற்று ஆசிரியர்களில் ஒருவர். ரிலேஷன்டி'ல் ஈஜிப்ட் (Relation De'l Egypt) அவரின் அபூர்வ படைப்புக்களில் ஒன்று. வாழை இலைகளால் அழகிய வண்ண வண்ண நிறங்களில் அழகாக முடைந்த பாய்களை வைத்திருந்த சில வணிகர்களை அவர் கண்டதாயும் அவர்களிடம் இவை பற்றிக் கேட்டதற்கு இவற்றை 'மாப'ரில் ஒவ்வொன்று இரண்டு 'தீனர்'[2] வீதம் வாங்கினதாகவும் கூறியதாக இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. வாழை இலையிலே பாய் முடையும் கலை தமிழகத்தில் இருந்தது என்பது இங்கு குறிக்கற்பாலது. இந்திய வணிகர்கள் குறிப்பிட்ட 'மாபர்', சோழ மண்டலக்கரையையே குறிப்பதாகும் என கர்னல் யூல் கூறுகிருர். இன்னெரு முஸ்லிம் வரலாற்று ஆசிரியரான அபுல் பிதா என்பவர் 'மலபார்' முடிவதும் 'மாபர்' தொடங்குவதும் குமரி முனையிலே என விளக்கியுள்ளார். இஸ்லாமிய வரலாற்று ஆசிரியர்களான றஷீதுத்தீனும், வஸபும் முறையே தங்களின்

1 காயல் பட்டணம் பெரிய குத்பா பள்ளி, சிறிய குத்பா பள்ளி ஆகிய இடங்களிலுள்ள சமாதிகளில் சுமார் 500 வருடங்களுக்கு முன் வாழ்ந்து மறைந்த சில பிரமுகர்களைப்பற்றிய குறிப்புகளில் 'மிஃபர்' என்ற சொற்றொடர்கள் காணப்படுகின்றன.

2 தீனர் என்பது அறபி தங்க நாணயம். 65 தானிய எடையுள்ளது.

வரலாற்று நூல்களான 'ஜாமி-உத்-தவாரீ'கிலும் 'தஸ்ஜியதுல் அம்ஸார் வதற்ஜியதுல் அஃஸா'ரிலும் 'மாபர் கொல்லத்திலிருந்து நெல்லூர்வரை 300 'பரஸங்'[1] கரையோரமாக நீண்டு கிடக்கிறது எனக் கூறியுள்ளனர். இவ்விரு நூலாசிரியர்களின் வரலாற்றுக் குறிப்புக்களைச் சிலப்பதிகாரம் ஊர்ஜிதம்செய்கிறது. பாண்டிய நாட்டின் தென் எல்லை கன்னியாகுமரிமுனை எனக் கவிச்சக்கரவர்த்தி கம்பரும் குறிப்பிட்டுள்ளார். டாக்டர் கால்ட்வெல் 'திருநெல்வேலி சரித்திரம்' (History of Tinnevelly) என்ற ஆங்கில வரலாற்று நூலில் பாண்டி நாட்டின் தென் எல்லை கொல்லம் எனக் குறிப்பிட்டுள்ளார்.[2] ஆனால் ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகப் பேராசிரியர் வில்ஸன் பாண்டிய நாட்டின் தென் எல்லை கன்னியாகுமரி முனை என எழுதியுள்ளார். 'மாபரை' மகா இந்தியா என்றும் உலகிலேயே மிக அழகும் புகழும் பெருமையும் பேரும் நிறைந்த நாடு என்றும் மார்க்கோபோலோ வியந்துரைத்துள்ளார்.[3] மாபர் இந்திய நாட்டின் திறவுகோல் என றஷீதுத்தீன் கூறியுள்ளார்.

## வர்த்தக கலாசார உறவு

நினைவுக்கு எட்டாத காலமுதற்கொண்டே தமிழர்கள் அறபிகளுடன் வர்த்தக கலாசார உறவு

1 'பரஸங்': பாரசீக நாட்டு நீட்டலளவை. 30 'ஸ்டாடியா'(STADIA) தொலை தூரம். 3½ மைலுக்குச் சமம்.

2 ராயல் ஆசியா சங்க (Royal Asiatic Society) சஞ்சிகை புத்தகம் 3 பக்கம் 199 கட்டுரை 9-ல் 'பாண்டிய நாட்டு சரித்திர வரலா'ற்றைப் பார்க்க.

3 கர்னல் ஹென்றியூல் தொகுத்த "ஸெர் மார்க்கோபோலோ 1871" புத்தகம் 2 அத்தியாயம் 16 பக்கம் 267 ஐயும் ஸர் எச். எம். எலியட் தொகுத்த 'இந்தியா சரித்திரம் 1867 அத்தியாயம் 7 பக்கம் 69 ஐயும் பார்க்க.

கொண்டிருந்தனர். கிரேக்கர்கள், ரோமர்கள், சீனர்கள், எகிப்தியர்கள் ஆகியோர் தமிழகத்தில் தங்கள் வர்த்தக நடு நிலையங்களை நிறுவியிருந்தனர். ஏற்றுமதி, இறக்குமதி வாணிபம் மிகப்பெருமளவில் நடைபெற்று, நறுமணம் கமழும் புற்கள் வண்ண வண்ண கைத்திறன் மிக்க ட்டைவைகள், முத்துக்கள் பவளங்கள், மற்றும் பற்பல பொருள்கள் செங்கடல் துறைகளுக்கும் அங்கிருந்து அலெக்ஸாந்திரியா, கெய்ரோ, மற்றும் ஐரோப்பிய துறைமுகப் பட்டினங்களுக்கும் கொண்டு செல்லப்பட்டன. ரோமாபுரி சீமாட்டிகள் தமிழகத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 'மஸ்லின்' துணியையே வழக்கமாக அணிந்துவந்தனர். 'பட்டினப்பாலை' 'பத்துப்பாட்டு' ஆகிய நூல்களில் இதுபற்றிய தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. கி மு. 1000-வது ஆண்டில், சாலமன் (Solomon) மன்னனுக்குத் தமிழ் வேந்தன், மயில், குரங்கு, சந்தனக்கட்டை ஆகியவைகளை அன்பளிப்பாக அனுப்பிவைத்துள்ளான். மாமன்னன் அகஸ்தஸ் (Augustus) காலத்தில் தமிழகத்துக்கும் ரோமுக்குமிடையில் ராஜரீக உறவுகள் இருந்துவந்துள்ளன கிரேக்கர்களையும் ரோமர்களையும் தமிழர்கள் 'யவனர்'களென அழைத்தனர். பிற்காலத்தில் அறேபியர்களும் இதே பெயராலேயே அழைக்கப்பட்டனர். புலவர் நக்கீரர் தமது 'நெடுநெல் வாடை' என்ற நூலில் 'யவனர்' பற்றிய முழு விபரங்களையும் கொடுத்துள்ளார். அதற்கு விரிவுரை எழுதிய புலவர் நச்சினர்க்கினியர் 'யவன'ருக்குச் 'சோனகர்'[1] என்று வியாக்கியானம் செய்திருக்கிருர். எகிப்தில் அண்மையிலே கண்டுபிடிக்கப்பட்ட சில புதை

---

1 சோனகன் — அந்நியன், குறிப்பாக கிரேக்கர்கள் அல்லது சோனகர்கள் [திவா — சோனகர் மனேயிற்றூய (கம்பரா, ஊர்த்தேடு 112)] — தமிழ்க் கலைக் களஞ்சியம் 1926 புத்தகம் 2 பாகம் 1

பொருள்களை ஆராய்ச்சி செய்தபோது தமிழர்களுக்கும் பண்டைய எகிப்தியர்களுக்கு மிடையிலுள்ள நெருங்கிய தொடர்புகள் தெரிய வந்துள்ளன. எம்பெருமான் (ஸல்) அவர்களின் தோழர்களில் ஒருவரான தமீம் அன்ஸாரி (றழி) அவர்களின் சமாதி கோவளத்திலும் மற்றொரு தோழரான உக்காஸா (றழி) அவர்களின் சமாதி பறங்கிப்பேட்டையிலும் காணப்படுவதிலிருந்து பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ் நாளிலேயே இஸ்லாமியப் பிரசாரகர்களாகச் சிலர் தமிழகம் வந்தனரென முடிகிறது ராமேஸ்வரத்தில் காணப்படும் ஆதி பிதா ஆதம் (அலை) அவர்களின் மக்களாகிய கெய்ன், ஏபெல் ஆகிய இரு சகோதரர் களின் சமாதிகள், ஈழத்திலுள்ள ஆதம் மலை (Adam's Peak) ஆகியவைகளும் சரித்திர பிரசித்தத்தைக் குறிக்கின்றன. "அறபி வர்த்தகர்கள் தென்னகத்தில் வர்த்தகச் சாவடிகளை நிறுவினார்கள்; இந்து சீனாவுக்கும் சீனாவுக்கும் போகும் வழியில் இவற்றைத் தங்கு துறைகளாக வைத்துக்கொண்டார்கள்" என்று முன்னாள் இந்திய யூனியன் அமைச்சரும், இலக்கிய கர்த்தாவுமான பேராசிரியர் ஹுமாயூன் கபீர் தமது "இந்திய பாரம்பரியம்" [Indian Heritage] என்ற நூலில் எழுதியுள்ளார்.

## எகிப்தியர்கள் குடியேற்றம்

கொடுமைக்குப் பெயர் பெற்ற ஹஜ்ஜாஜ் பின் யூசுப் புகழுக்கும் பெயர் பெற்றவன். போர்ச்சுகல் (Portugal) நாட்டிலிருந்து சிந்து வரை பரந்து விரிந்து கிடந்த அகண்ட இஸ்லாமியக் குடிஅரசின் கீழ்ப்பகுதி ராஜ்யங்களின் கவர்னர் ஜெனரலாக இருந்தான் ஹஜ்ஜாஜ். இஸ்லாமியக் குடிஅரசுத் தலைவருக்குச் சிங்கள வேந்தன் கொடுத்த சில அன்பளிப்புகளை எடுத்துக்

கொண்டு சென்ற சில அறபிய மரக்கலங்கள் சிந்துக் கரையில் கடும் புயலுக்குள் சிக்கின. சிந்து நாட்டின் கடற்கொள்ளைக்காரர்கள் மரக்கலங்களைத்தாக்கி, அறபி வணிகர்களைக் கொள்ளையிட்டு அவர்களையும் அவர்களின் பெண்களையும் கைது செய்தனர். இது விபரமறிந்த ஹஜ்ஜாஜ் இதற்குப் பரிகாரம் தேடி, சிந்து மன்னருக்கு வேண்டுகோள் விடுத்தான். ஆனால், மன்னன் இவ்வேண்டுகோளுக்கு செவிசாய்க்க வில்லை. இதனால் கோபமுற்ற ஹஜ்ஜாஜ் தன் மருமகனாகிய 17 வயது இளைஞன் முஹம்மது பின் காஸிம் தலைமையில் சிந்து நாட்டைக் கைப்பற்ற ஒரு படையை அனுப்பி வைத்தான். இது நிகழ்ந்தது கி.பி. 712-ல். தரைமார்க்கமாக முஸ்லிம்கள் முதன் முதல் புகுந்தது இங்கு தான். எட்டாவது நூற்றாண்டுப் பிற்பகுதியில் ஓர் அறபிக் கூட்டம் கள்ளிக் கோட்டை (Calicut)யில் கடல் மார்க்கமாக வந்து குடிபுகுந்தது. தமிழகத்தில் அறபிகளின் முதல் குடியேற்றம் ஒன்பதாவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஏற்பட்டுள்ளது. அது சமயம் அப்பாஸிய்யா கலீபாவாகிய ஹாரூன் வாதிக் என்பவன் எகிப்து நாட்டை அரசு புரிந்து கொண்டிருந்தான். அப்பாஸிய்யா கலீபாக்களின் மதப் புரட்டுகளுக்கு ஆதரவு அளிக்காத இமாம் ஷாபீ (றஹ்) அவர்களின் வழியைப் பின் பற்றியவர்களை எல்லாம் கொடுமைப்படுத்தினான். இமாம் ஷாபீ (றஹ்) அவர்கள் ஹிஜ்ரீ 227-ல் மரணமானார்கள். அப்பாஸிய்யா கலீபாவின் கொடுமை கண்டு சகியாத எகிப்திலுள்ள பல்வேறு குடும்பங்களைச் சேர்ந்த அறபிகள் எகிப்தை விட்டுத் தமிழகத்துக்கு 'ஹிஜ்ரத்'[1] செய்ய முடிவு கட்டினர். ஆண்

1. ஹிஜ்ரத் என்ற அறபி வார்த்தைக்கு நாடுவிட்டு நாடு சென்று குடியேறுதல் என்பது பொருள். பெருமானார் (ஸல்) அவர்கள் திரு மக்காவை விட்டுத் திரு மதீனா சென்ற சம்பவத்தை 'ஹிஜ்ரத் என அழைப்பதுண்டு அன்று முதல் ஆரம்பித்த இஸ்லாமிய வருடம் தான் 'ஹிஜ்ரீ' ஆண்டு.

களும் பெண்களுமாக 224 நபர்களை ஏற்றிக் கொண்டு ஒரு மரக்கலம் கி. பி. 875-ல் தமிழகத்திலுள்ள காயல் துறை வந்து சேர்ந்தது. இவர்கள் அன்னியர்களாயினும் பாண்டிய வேந்தன் இவர்களுக்கு எல்லா வகையான ஒத்தாசைகளும் செய்து அன்பாக நடத்தினான். சகாப்தம் 798 (கி. பி. 875)-ல் பாண்டிய வேந்தன் இந்த அறபி அகதிகளுக்கு வழங்கிய செப்புப் பட்டயத்தில் இந்த விபரங்களும் வேறு பல சுவையான தகவல்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தச் செப்புப் பட்டயம் சென்னை நூதன சாலையில் இன்றும் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கிறது. எகிப்து நாட்டை 'மிசிரம்'[1] என்றும், எகிப்தின் தலை நகராகிய 'காஹிரு'[2] அல்லது 'கெய்ரோ' என்று அழைக்கப்படும் பட்டினத்தை 'காயிறூன்' என்றும் அப்பட்டயத்தில் குறிக்கப்பட்டுள்ளது. வந்த அகதிகளின் எண்ணிக்கை, குடும்பவாரி விபரம், அடிமைகள், வீரர்கள், நாவிதர்கள் எண்ணிக்கை, ஆண்கள் இத்தனை, பெண்கள் இத்தனை என்னும் பல விபரங்கள், ஒவ்வொரு குடும்பத்தின் தலைவரின் பெயர், அவரவருக்குரிய பட்டம், பதவி, கடமை; இப்படியான வேறு பல விபரங்களும் இந்தச் செப்புப் பட்டயத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. அதில் காணப்படும் சில தகவல்களை அட்டவணைப் படுத்தி இதனடியிற் தருகின்றேன்:-

---

1 ''சீனம், மிசிரம் யவனம், ரகம்......''—பாரதியார். தொன்று தொட்டே தமிழர்கள் எகிப்தை மிசிரம் என்று அழைத்துள்ளனர். எகிப்துக்கு அறபியில் இன்றும் 'மிஸ்று' என்றே பெயர் உளது.

2 எகிப்தின் தலைநகரின் அறபிப் பெயர் 'காஹிரு'. அங்கிருந்து தமிழகம் வந்து குடி புகுந்த காயல்பட்டணத்தின் அறபிப் பெயரும் 'காஹிரு'வே. 'மிஸ்று' மிசிரமானது போன்று 'காஹிரு' 'காயிறூ'னாகத் தமிழர் நாவில் மருவிற்று.

| | குடும்பம் | ஆண் | பெண் | அடிமை | மொத்தம் | குடும்பத்தலைவர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஹாஷிம் | 23 | 9 | 4 | 36 | கமாலுத்தீன் |
| 2 | பக்ரீ | 39 | 16 | 7 | 62 | முகம்மது கல்ஜீ |
| 3 | பாரூகீ | 43 | 24 | 12 | 79 | உமறு மஸ்கூற் |
| 4 | உமையா | 14 | 5 | 2 | 21 | ஸுபைற் |
| 5 | ராணுவ யுத்தர்கள் | 16 | 6 | — | 22 | |
| | நாவிதர்கள் | 3 | 1 | — | 04 | |
| | | 138 | 61 | 25 | 224 | |

1 பெருமானுர் (ஸல்) அவர்கள் வழி வந்தவர்கள் 'ஹாஷிம்' வமிசத்தவர்கள். இவர்களை 'ஸய்யிது' 'ஸாதாத்' (நாயகம்) என்றும் மக்கள் கௌரவமாக அழைப்பதுண்டு.

2 இஸ்லாமியக் குடிஅரசின் முதல் ஜனாதிபதி கலீபா 'அமீருல் முஃமினீன்' அபூபக்று (றழி) அவர்களின் வமிசத்தவர்கள்தான் 'பக்ரீ' என அழைக்கப்படுபவர்கள். 'ஸித்திகீ' என்றும் அழைப்பதுண்டு. தமிழகத்திலே இவ் வமிசத்தைச் சேர்ந்த 'வலி'மார்கள் நிறம்ப வாழ்ந்துள்ளனர்.

3 குற்றம் செய்த தன் மகனையே கொலைத் தண்டனைக் குள்ளாக்கிய நடுக் கண்ட நியாயம் வழங்கிய முட்டை தூக்கிய முடி மன்னன், கலீபா உமறே பாரூக் (றழி) அவர்களின் வமிசத்தவர்களைத்தான் 'பாரூகீ' என இங்கு குறிக்கப் பட்டுள்ளது. அதிகமாக வந்தவர்களும் இவ்வமிசத்தவர்களே.

4 கலீபா உதுமான் (றழி) அவர்கள் வமிசத்தவர்கள் 'உமையா'க்கள்.

5 ராணுவ யுத்தர்களின் திரிபுதான் ராவுத்தர்கள். இவர்கள் குதிரை வீரர்கள்.

முஹம்மது கல்ஜீயைத் தேசாதிபதியாகவும் கமாலுத்தீனைக் கடலாதிபதியாகவும் உமறு மஸ்கூறை நியாயாதிபதியாகவும் ஸுபைறை காவலாதிபதியாகவும் பாண்டிய வேந்தன் நியமித்தான்.[1] இது சம்பந்தமாகத் தவத்திரு பிஷப் டாக்டர் கால்ட்வெல் பாதிரியார் கூறுவதையும் பார்ப்போம். அவர் எழுதுகிறார்:

"முஹம்மதிய அறபிகள்[2] 9-வது நூற்றாண்டில் 'மாபர்' கரையில் குடியேறி, கிழக்குக் கரையிலும் இலங்கைக்கரையிலும் பரந்து வாழ்ந்ததாகத் தெரிகிறது. கிழக்குக்கரையில் அவர்களின் முக்கிய குடியேற்ற இடம் நெல்லை மாவட்டத்திலுள்ள காயல் பட்டணம். தென் அறபிய நாட்டிலுள்ள 'ஸாபிஈன்'கள் என்ற பண்டைய அறபிகள், கிரேக்கர்கள் வருவதற்கு மிக காலத்துக்கு முன்பே இந்தியக் கரைக்கு அடிக்கடி வந்துபோய்க் கொண்டிருந்தனர். அறபி வணிகர்களின் வழி வந்த கலப்பு இனத்தை மேற்குக் கரையில் 'மாப்பிள்ளை' (Mophla)கள் என்றும் கிழக்குக் கரையில் 'லெப்பை'கள்[3] என்றும் அழைக்கின்றனர். தமிழர்களால் துலுக்கர்கள்[4] அல்லது ஜோனகர்கள்[5] (யவனர்கள்) என அழைக்கப்பட்டனர். அவர்களுக்கு

---

1 தேசாதிபதி, கடலாதிபதி, நியாயாதிபதி, காவலாதிபதி - என்ன அழகான பதவிகள், பெயர்கள்!

2 அறபிகள் யாவரும் முஸ்லிம்களல்ல. கிரிஸ்தவர்களும் யூதர்களும் அறபியர்களில் உண்டு அதனுற்றான் 'முஹம்மதிய அறபிகள்' எனக் கூறப்பட்டுள்ளது.

3 'லெப்பை' வகுப்பாரைப் பின் தங்கிய வகுப்பாராக இன்றும் கணிக்கப்பட்டு அரசாங்கம் உதவி புரிந்து வருகிறது.

4 துலுக்கர் என்ற வார்த்தைக்கு ஆதார பூர்வமான மூலம் சரியாகத் துலங்கவில்லை

5 ஜோனகர் அல்லது சோனகர் யவனர் என்ற வார்த்தையின் திரிபு.

வழங்கப்பட்ட சாதாரணப் பட்டம் மரைக்கான்[1] அல்லது மரக்கான். மீகாமன் அல்லது கப்பலோட்டி என்பது அதன் பொருள். கடல் மாலுமிகளாகவே அவர்கள் முதன் முதல் அறிமுகமானூர்கள். சந்தேகமின்றி அவர்களை அப்படி அழைத்ததும் சரியே. அவர்களுக்கு ஹிந்துஸ்தானி மொழியில் பழக்கமில்லை. தாங்கள் வாழும் நாடுகளின் மொழிகளாகிய தமிழ் அல்லது மலையாளம் தான் அவர்கள் பேசும் மொழி. ஹிந்துஸ்தானி மொழிபேசும் முஹம்மதியர்களாகிய பட்டாணியர்களும் மற்றவர்களும் வட இந்தியாவிலிருந்து வந்தவர்கள். முற்றும் வேறுன இனங்களிலுள்ளவர்கள்[2].

## அறபிகள் குடியேற்றம்

இலங்கையிலுள்ள தமிழ் பேசும் முஸ்லிம்களை சிங்களவர்கள் யோன்[3] என அழைக்கிறுர்கள். இது பாலி மொழிப் பதம். கொழும்பிலுள்ள பழைய சோனகர் தெருவிலும் புதிய சோனகர் தெருவிலும் போடப்பட்டிருக்கும் தெரு அடையாளப்பலகைகளில் சிங்களத்தில் 'பறண யோன் வீதிய' என்றும், 'அலுத் யோன் வீதிய' என்றும் முறையே குறிக்கப்பட்டுள்ளன. 'யோன்' யவனராக மாறி, காலப்போக்கிலே சிதைந்து, சோனகராக வந்திருக்கக் கூடும். ஆங்கிலத்தில் 'மூர்' (Moor) என்ற சொல், 'சோனகர்' என்ற சொல்லின் சரியான பொருளைக் குறிக்க

---

1 மரக்கலராயர் என்ற வார்த்தையின் திரிபு மரைக்காயர்

2 திருநெல்வேலி சரித்திரம் - ஆங்கிலம் - டாக்டர் கால்ட்வெல் — பக்கம் 36.

3 யோன் — இது பாலி மொழிப்பதம். யவனர்கள் என்று தமிழர்களும் 'யோன்' என்று சிங்களவர்களும் சோனகர்களை அழைத்துள்ளனர்.

வில்லை. ஸர் ஜான் எமர்ஸன் டென்னண்ட் '(Sir John Emerson Tennant) என்பவர் 'மூர்' (Moor) என்ற சொல் அர்த்தமற்ற பட்டம் எனக் கூறியுள்ளார். ஸர் ஜான் எமர்ஸன் டென்னண்ட், ஸர் ஸைமன் காஸி சிட்டி, ஸர் பொன்னம்பலம் ராமநாதன் ஆகியோர் இலங்கையில் அறபிகளின் முதற் குடியேற்றம் கி. பி. 1024-ல்[1] நிகழ்ந்ததாகச் சரித்திர ஆதாரங்களுடன் கூறியுள்ளனர். கீழ் வருவன அத்தகைய கருத்துக்களிற் சிலவாகும்:

"இலங்கை 'மூர்' (சோனகர்)கள் தங்கள் இனத்தின் முதல் இடம் காயல் பட்டணம் என மதிக்கின்றனர். கி. பி. 1024-ல் களுத்துறை மாவட்டத்திலுள்ள பர்பரீன் என அழைக்கப்படும் பேருவளையில் முதன் முதலாக வந்திறங்கியதாகவும், இந்தத் தீவில் இது சரித்திர முக்கியம் வாய்ந்த குடியேற்றம் எனவும் மதிக்கின்றனர்."

—டாக்டர் டென்ஹாம்

"'யவன' என்ற பெயர் ஆரம்பத்தில் அயோனிய தீபகற்பத்திலுள்ள (Ionian Peninsula) கிறேக்கர்களுக்கு ஏற்பட்டு, பின் இந்தியாவிற் குடிபுகுந்த அறபிகளுக்கு வழங்கப்பட்டது. அவர்கள் (அறபிகள்) முதன் முதலாக இந்தியாவில் குடி புகுந்தது கன்னியா குமரிக்கு வடகிழக்கேயுள்ள காயல்பட்டணம் என்ற ஊரிலாகும். தென் இந்தியாவில் நன்கு ஸ்திரமாகி அங்குள்ள மக்களுடன் கலப்பு மணமும் செய்துகொண்டபின் ஏக தெய்வ வழிபாட்டையே அவர்கள் தொடர்ந்து பின் பற்றி நடந்ததுடன்

---

1 1860-ல் பதிப்பிக்கப்பட்ட ஸர் ஜேம்ஸ் எமர்ஸன் டென்னண்ட் எழுதிய "இலங்கை" (Ceylon) 631-632 வது பக்கங்களைப் பார்க்க.

தமிழைத் தங்களின் தாய்மொழியாகவும் ஏற்றுக் கொண்டனர்.''[1]

—ஏ. ஜி. ரணசிங்க ஈ.ஸி எம்.ஜீ;ஸி.பி.ஈ.

''கச்சிமலைப்பள்ளி தென் மேற்குப் பருவக்காற்றுத் தாக்குதலுக்கு இடமில்லாத ஒரு நிலத்தின் நுனியில் அமைந்துள்ள ஒரு மூலையில் எழுப்பப் பட்டுள்ளது. இந்த இடத்திற்ருன் கி. பி. 1024-ல் 'மூர்'கள் என்று தவருக அழைக்கப்படும் யவனர்களைக் கொண்ட ஒரு கூட்டம் கன்னியா குமரிக்கு வட கிழக்கே அமைந்துள்ள காயல் பட்டணத்திலிருந்து வந்து குடிபுகுந்து, இந்தத் தீவில் தங்களின் முக்கிய சரித்திரப் பிரசித்தம் வாய்ந்த குடியேற்றமாக்கிக் கொண்டனர் என கர்ண பரம்பரையாகக் கூறப்படுகிறது. அவர்களின் வழித்தோன்றல்கள்தான் இன்றைய இலங்கை 'மூர்' (சோனகர்)கள்.''

—டாக்டர் ஆர். எல் புரோஹியர் டி லிட்[2]

''கண்டி அரசவைத்தூது பற்றிய குறிப்பில் திரு. பாயிற் (Boyd) என்பவர் 'மூர்'களைச் சோழியர்கள்[3] எனக் குடுப்பிடுகிருர் ஸர் அலக்ஸாண்

1 'இலங்கை ஜனக்கணிதம்'' (1911) பக்கம் 234

2 இவர் ஜனக்கணிதத் துணையாளர். ''இலங்கை ஜனக்கணிதம் 1946'' புத்தகம் 1 பாகம் 1 பக்கம் 8ஐப் பார்க்க.

3 ஒரு காலத்தில் பாண்டிய நாடும் சோழ நாடும் சோழபாண்டிய நாடு என்ற பொதுப்பெயரால் வழங்கியபடியால் தமிழகத்திலிருந்து வந்தவர்களையெல்லாம் சோழியர்கள் எனச் சிங்களவர்கள் அழைத்திருக்கக் கூடும். வங்கத் தலைநகராம் கல்கத்தாவிலே ஒரு சோழியா பள்ளி இருக்கிறது தென்னக முஸ்லிம்கள் நிர்வகிக்கும் பள்ளிதான் இது. பர்மாவிலும் மலேஷியாவிலும் சோழியாத் தெருக்களும் உண்டு. இங்கு வசிப்பவர்களில் மிகுதமானவர்கள் தமிழ் முஸ்லிம்களே.

டர் ஜான்ஸ்டன் (*Sir Alexander Johnston*) என்பவர் இவர்களுக்கு லெப்பைகள்[1] எனப் பட்டஞ் சூட்டியுள்ளார். சிங்களவர்கள் இவர்களைப் படகோட்டி அல்லது மரக்கலய[2] என அழைக்கின்றனர். அறபிகள் காயல்பட்டணத்தில் குடி புகுந்து அங்கிருந்து இலங்கையிலும் இந்திய தீப கற்பத்தின் கரையோரப் பகுதிகளிலும் பரவினர் என ஸர் ஸைமன் காஸி சிட்டி[3] கூறுகிறார்.''

—ஸர் ஜேம்ஸ் எமர்ஸன் டென்னண்ட்

''மூர் (சோனகர்)கள் துவக்கமாக மதுரைக் கரையிலிருந்து முக்கியமாக காயல்பட்டணத்திலிருந்து வந்தவர்கள்.''[4]

—இலங்கை அரசாங்க டச்சுக் குறிப்பு

---

1 அறபிகள் தங்களுக்குள் ஒருவரை ஒருவர் விளிக்கும்பொழுது அழைப்பவருக்கு விடை அளிப்பவர் 'லப்பைக்' (இதோ தங்கள் சமூகம்) எனக் கூறுவது அறபிகளின் மரபு. இதைக் கண்ட தமிழர்கள் அறபி வமிசத்தினர்களை 'லப்பை'கள் என அழைத்திருக்கக் கூடுமல்லவா?

2 மரக்கலயா என்பது சிங்கள வார்த்தை. மரக்கலராயர் என்பது தமிழ் வார்த்தை மரக்கலராயர் மரைக்காயராக மருவியதுபோன்று மரக்கலயா என்பது 'மரக்கல மினியா'வாக மாறி இருக்கலாம். இரண்டுக்கும் பொருள் ஒன்றே. கப்பல் வணிகர் என்பதே இதற்குச் சரியான பொருள்.

3 ஸர் ஸைமன் காஸி சிட்டி என்பவர் முதன் முதலாகத் தமிழ் பேசும் ஹிந்து, முஸ்லிம், கிறிஸ்தவர்கள் அனைவர்களுக்கும் ஏக பிரதிநிதியாக இலங்கைச் சட்ட சபைக்கு நியமிக்கப்பட்டவர். ராயல் ஆசியா சங்க அங்கத்தினர். சோனகர்கள் பற்றி ஓர் ஆய்வுக் கட்டுரையை ராயல் ஆசியா சங்க சஞ்சிகையில் எழுதிக் குடியேற்ற நாட்டுக் காரியதரிசி (Colonial Secretary) யால் பாராட்டும் பரிசும் பெற்றவர்.

4 இலங்கை அரசாங்க டச்சுக் குறிப்பு (Ceylon Govt. Dutch Record) இலக்கம் 4 பக்கம் 18

இந்தச் சந்தர்ப்பத்தில் டாக்டர் புரோஹியரின் ஆராய்வுகள் சம்பந்தமாக நிகழ்ந்த ஒரு சுவையான சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகின்றேன். 3-3-1964-ல் 'டெய்லி நியூ'ஸில் முஸ்லிம்கள் முதன் முதல் வந்திறங்கிய பேருவளைத்துறையைப் பற்றி டாக்டர் புரோஹியர் ஓர் ஆய்வுக் கட்டுரை எழுதியிருந்தார். அதில் தான் இவ்விபரங்களைக் கொடுத்துள்ளார். இதுபற்றி நான் சில விளக்கங்களை விரும்பி எழுதிய எனது கடிதமும், அதற்கு கலாநிதியின் விடையும் 21-3-64 டெய்லி நியூஸில் பிரசுரிக்கப் பட்டது. அதை அப்படியே இங்கு தருகிறேன்:

## Ceylon Moors

In "BERUWELA WHERE THE SAIL WAS FURLED" by Dr R. L. Brohier D Litt. (C. D. N. 3. 3. 64) it is very surprising to read that the Ketchimalai Mosque was built by the descendants of the emigrant band of yavanas styled by misnomer Moors from Kayalpatnam to the north east of Cape Comorin landed on this spot in 1024 A. D. and made it their most important and historic settlement in the Island.

He contends that the Ceylon Moors of today are the descendants of the Muslims of Kayalpatnam. According to Dr. Brohier, this settlement occured 940 years before. According to Mr. John Emerson Tennant, Sir Simon Casie Chitty and other distinguished historians, the first settlement of the Muslims occured in the 8th century and according to the traditions prevailing among the Muslims of Ceylon their ancestors fled from Arabia and settled in Ceylon.

It will be more informative if Dr. Brohier explains and enlightens your readers with facts and references in support of his contention regarding the settlement of Mus-

lims from Kayalpatnam in 1024 A. D. and the usage of the term "Moor" instead of 'Yavana'

Colombo. **M. K. SYED AHMED**

Dr. Brohier states: Tennant wrote: (Vol. I p 620) "The meaningless designation of MOORS........is a generic term......the origin, adventures and arrival of these people are among the historic mysteries of Ceylon.

Denham wrote: (Census of Ceylon I. 11 P. 234)

"The Moors in Ceylon themselves regard Kailpatnam as the home of their race and the landing at Beruwela or Berberyn in the Kalutara District, said to have been made in 1024 A. D., as their most important and historic settlement in the Island" -Editor

தமிழாக்கம்

## இலங்கைச் சோனகர்கள்

இலங்கை 'டெய்லி நியூஸ்' 3-3-64 இதழில் டாக்டர் ஆர். எல். புரோஹியர் டி. லிட். 'பாய் சுருட்டிய பேருவளை' என்ற கட்டுரையில் கச்சி மலைப்பள்ளி கி. பி. 1024-ல் கன்னியா குமரிக்கு வட கிழக்கேயுள்ள காயல்பட்டணத்திலிருந்து இங்கு வந்து குடிபுகுந்த சோனகர்கள் எனத் தவறாக அழைக்கப்படுகின்ற யவனர்களின் சந்ததியினர்களால் கட்டப்பட்டுள்ளது என்றும், தங்களின் மிக முக்கியமானதும் சரித்திரப் பெருமை வாய்ந்ததுமான குடியேற்றமாக இது இலங்கையில் நிகழ்ந்தது என்றும் கண்டிருப்பது வாசிப்பதற்கு மிக ஆச்சரியமாக இருக்கிறது.

இக்கால சோனகர்கள் காயல்பட்டணம் முஸ்லிம்களின் வழித்தோன்றல்கள் என்று அவர் தர்க்

கிக்கிருர். டாக்டர் புரோஹியர் கூற்றுப்படி இக் குடியேற்றம் 940 வருடங்களுக்கு முன் நிகழ்ந்துள் ளது. திரு ஜான் எமர்ஸன் டென்னெண்ட், ஸர் ஸைமன் காஸி சிட்டி மற்றும் பிரபல சரித்திர வல் லுனர்களின் கூற்றுக்களின் படி முஸ்லிம்களின் முதல் குடியேற்றம் 8-வது நூற்ருண்டில் நிகழ்ந்தது என்றும், இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் நிலவும் கர்ணபரம்பரைக் கூற்றுக்களின் படி அவர்களின் முன்ஞேர்கள் அறேபியாவிலிருந்து இங்கு வந்து குடி யேறினர் என்றும் தெரிகிறது.

கி. பி. 1024-ல் காயல்பட்டணத்திலிருந்து முஸ்லிம்கள் குடி புகுந்தது பற்றியும் 'யவனர்' என்ற வார்த்தைக்குப் பதிலாக 'மூர்' (சோனகர்) என்ற வார்த்தை உபயோகத்துக்கு வந்தது பற்றியும் புள்ளி விபரங்களுடனும் ஆதாரங்களுடனும் டாக்டர் புரோஹியர் தெரிவிப்பாராஞல் அதிக தகவல்களைத் தந்தவராவார்.

கொழும்பு எம். கே. செய்யிது அஹமது

டாக்டர் புரோஹியர் கூறுகிருர்: டென்னெண்ட் எழுதியுள்ளார்:(பு. 1 ப. 620)''Moors(சோனகர்கள்) என்ற அர்த்தமற்ற பெயர் ஒரு பொதுப்பெயர் இந்த மக்களின் பூர்வம், அருஞ்செயல், வருகை ஆகியவை இலங்கையின் சரித்திரத்திலேயே ஒரு மர்மமாகவே இருக்கிறது.

டென்ஹாம் எழுதியுள்ளார்:(Census of Ceylon இலங்கை ஜனக்கணிதம் 1911, ப. 234) ''இலங்கைச் சோனகர்கள் தங்கள் இனத்தின் தாயகம் காயல் பட்டணம், என்றும் களுத்துறை மாவட்டத்திலுள்ள பார்பரின் அல்லது பேருவளையில் கி. பி. 1024-ல் வந்திறங்கிஞர்கள் என்றும், இதுவே அவர்களின்

மிக முக்கியம் வாய்ந்த சரித்திர பிரசித்தம் வாய்ந்த குடியேற்றம் என்றும் அவர்களே மதிக்கின்றனர்''

—ஆசிரியர்

காயல் பட்டணம் சோனகர் (மூர்)களின் தந்தை நாடாக இன்றும் மதிக்கப்படுவதாக ஸர் ஸைமன் காஸி சிட்டி கூறுகிறார். 'மூர்' (சோனகர்)கள் ஷாபீ மத்ஹபை[1] (ஷாபீ பிரிவை)ச் சேர்ந்த 'ஸொன்னி'[2] (சுன்னத் வல்ஜமா அத்தினர்)கள் என்றும், அவர்களின் எதார்த்த பூர்வமான வேத மொழி அறபி என்றும், அவர்களின் பேசும் சுய மொழி அறபிச் சொற்கள் மிகுதியும் கலந்த தமிழ்[3] என்றும் ஸர் ஜேம்ஸ் எமர்ஸன் டென்னண்ட் கூறியுள்ளார். இலங்கைப் பல்கலைக் கழக அறபித் துறைத் தலைவரும், விரிவுரையாளருமான டாக்டர் எஸ். ஏ. இமாம்[4] 11-3-64-ல் முஸ்லிம் லீக் செனேட்டில் ஸரந்தீவு

---

1 முஸ்லிம்களின் அங்கீகரிக்கப்பட்ட 'மத்ஹபு' (அபிப்பிராயப்பிரிவு)கள் நான்கு—ஹனபீ, ஷாபி, மாலிகி, ஹன்பலீ. இவர்களில் அல் இமாம் இத்ரீஸ் ஷாபீ நாயகம் அவர்களின் வழியைப் பின்பற்றியவர்கள்தான் 'ஷாபீ'க்கள். தமிழகத்திலும், கேரளத்திலும், மகாராஷ்டிரத்திலும், குஜராத்திலும் ஈழத்திலும் கரையோரப்பகுதிகளில் குடிபுகுந்து வாழும் அறபி சந்ததியினர்களாகிய முஸ்லிம்கள் அனைவர்களும் 'ஷாபீ'யாக்களே. கேரளத்திலும் ஈழத்திலும் முஸ்லிம்கள் அனைவரும் ஷாபீயாக்கள். தமிழகத்தின் கரையோரப்பகுதிகளாகிய காயல்பட்டணம், குலசேகரன்பட்டணம், அதிராம்பட்டணம், தேஙிபட்டணம், நாகபட்டணம், சென்னைப்பட்டணம், கீழக்கரை மற்றும் இவை சேர்ந்த இடங்களைத் தவிர இதர பகுதிகளில் 'ஹனபீ' முஸ்லிம்கள் வாழ்கின்றனர்.

2 சுன்னத் வல் ஜமாஅத்தினர் என்பவர்களைத்தான் 'ஸொன்னி' என அழைக்கப்பட்டுள்ளது.

3 அறபு கலந்த தமிழ் — இதை அறபுத் தமிழ் என்றுங் கூறுவர். தமிழை அறபி எழுத்தில் எழுதும் முறையும் உண்டு.

4 தினகரன் 12-3-64 பக்கம் 5

(இலங்கை) என்ற பொருள் பற்றிப் பேசுகையில், காயல் பட்டணம் முற்கால அறபிகளின் கோட்டை யாக இருந்தது என்றும், அந்த நாட்டு மொழியை அறபிகள் பயின்றார்கள் என்றும், அது அவர்களின் வர்த்தகத்துக்கு உபயோகமாயிருந்தது என்றும், காயல் பட்டணத்திலிருந்து இலங்கை வந்த அறபிகள் தமிழ் மொழியை இங்கு கொண்டு வந்து பரவச் செய்தனர் என்றும், இலங்கை முஸ்லிம்களின் தாய்மொழியாக தமிழ் ஆயிற்று என்றும் குறிப்பிட்டுள்ளார். "சில சோனகக் குடி மக்கள் காயல்பட்டணத்திலிருந்து யாழ்ப்பாண தீப கற்பத்திலுள்ள தெற்கு மிருசுவிலில் குடி புகுந்தார்கள்" என்று முதலியார் குலசபாநாதன் பதிப்பித்துள்ள யாழ்ப்பாண வைபவ மாலை என்னும் நூலின் 39-வது பக்கத்தில் ஒரு குறிப்பு காணப்படுகிறது. காயல் பட்டணத்திலிருந்து சில ஹிந்துக்களும் யாழ்ப்பாணத்தில் குடி புகுந்ததாக வேறு சில சரித்திரக் குறிப்புக்களில் காணப்படுவதாக 'கல்கி' தீபாவளி மலர்[1] கட்டுரையொன்றில் குறிக்கப்பட்டுள்ளது.

"இலங்கை 'மூர்' (சோனகர்)கள் எதார்த்தத்திலே தமிழ் முஹம்மதியர்களே"

—வலண்டையின் (Valentine) (அத்தியாயம் 15: பக்கம் 214 பார்க்க)

காயல்பட்டணத்தில் தமிழ் முஹம்மதியர்களின் வரலாற்றின் நெற்றிக்கல் இருக்கிறது என்றும், கெய்ரோ(Cairo)விலிருந்து சில பிரசாரகர்கள் காயல்பட்டணம் வந்து இறங்கி, 9-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் தங்களின் தலைமை இடமாக

---

1 கல்கி தீபாவளி மலர் 1965—தொண்டமண்டலமும் யாழ்ப்பாணமும், எஸ். சிவபாதசுந்தரம்.

அதை ஆக்கிக் கொண்டார்கள் என்றும், 'காயல்' என்பது 'கெய்ரோ' அல்லது 'காஹிரு'வின் மறு பெயர் என்றும் ஸர் பொன்னம்பலம் ராமநாதன் கூறியுள்ளார். தமிழ் முஸ்லிம்களின் முன்னோர்கள் எகிப்திலிருந்து 9-வது நூற்றாண்டில் காயல்பட்டணம் வந்து குடி புகுந்து, அங்கிருந்து இந்தியாவின் கீழ்க்கரை யோரங்களிலும் இலங்கையிலும் குடி புகுந்தனர் என்பது இவற்றால் நிரூபணமாகின்றது.

## தென் பாண்டி நாட்டை ஆண்ட அறபி மன்னர்

ஓர் அறபி அகதி தென்பாண்டிய நாட்டின் வேந்தராகவும், இன்னொரு அறபி அகதி சுந்தர பாண்டிய தேவரின் முதல் அமைச்சராகவும் இருந்ததாக வரலாறு கூறும் உண்மைகள் இக்காலத்தில் எழுதப்பட்டுள்ள வரலாற்று நூல்களில் மூடி மறைக்கப்பட்டுள்ளன. சுந்தரபாண்டியதேவர் வலிமை மிக்க மாமன்னராகவும் பேரறிஞராகவும் விளங்கியவர். பாண்டிநாட்டை மாத்திரமல்ல, சோழ நாட்டையும் ஈழ நாட்டின் ஒரு பகுதியையும் ஒரேகுடையின் கீழ் அரசாட்சி செய்த மன்னாதி மன்னர். சீனா நாட்டுடன் ராஜரீக தொடர்பு வைத்திருந்தவர். பாண்டி நாட்டின் தூதுவராகச் சீனா நாட்டுக்கு ஓர் அறபி அகதியை அனுப்பிவைத்தார் என்று வரலாறு கூறுகிறது. இதுபற்றியும் இக்கால வரலாற்று ஏடுகளில் எத்தகவலுமில்லை. இந்நிகழ்ச்சி பற்றி உண்மையான வரலாறு கூறும் செய்திகளை இவண் தருகிறேன்.

## எகிப்தில் ஏற்பட்ட புரட்சி

கி. பி. 1280-வது வருடம். எகிப்து நாட்டில் ராணுவ ஆட்சி நடைபெற்ற காலம் இது. வெள்ளை

அடிமை (White Slave) இனத்தைச் சேர்ந்த மம்லூக் சுல்தான் முகம்மது கலாவூன் என்பவன் எகிப்தின் வேந்தனாக இருந்த காலம். இவன் ஒரு கொடுங் கோலன். இமாம்[1]களையும் பெருமானார் (ஸல்) அவர்கள் வழிவந்த 'ஸாதாத்'[2]களையும் கொடுமைப்படுத்தினான். மக்கள் மத்தியிலே புரட்சி ஏற்பட்டது. புரட்சியாளர்களை மன்னன் அடக்கி ஒடுக்கினான். 'கெய்ரோ'[3] நகரவாசிகள் 'ஹிந்துஸ்தானு'[4]க்கு 'ஹிஜ்ரத்'[5] செய்ய முடிவுசெய்தனர். ஐந்து கப்பல்களில் பிரயாணமாயினர். ஒன்று ஹிந்துஸ்தான் வரும் வழியில் 'தவறிவிட்டது'[6]. இரண்டாவது கப்பல் 'ஸூரத்'[7]திலும், மூன்றாவது 'கோக்கானூரி'[3] லும், நான்காவது கப்பல் 'அச்சை நிரூபம்'[9] என்ற துறை முகத்திலும் போகி சேர்ந்தது. இந்தத் துறைகள் அனைத்தும் அறபிக் கடலிலே மேற்கு கரையிலே அமைந்துள்ளன. செய்யிது ஜமாலுத்தீனையும் அவரின் குடும்பத்தினரையும் ஏற்றிவந்த ஐந்தாவது கப்பல் கி. பி. 1284-ல் 'தூத்துக்குடி'[10] க்கு அண்மையிலுள்ள காயல்துறை வந்து

---

1 இமாம் — தலைவர் என்பது இதன் பொருள்.

2 ஸாதாத் — பெருமானார் (ஸல்) அவர்கள் வமிசத்தவர்களை இப்படி அழைப்பதுண்டு.

3 கெய்ரோ — இதன் அறபிப் பெயர் 'காஹிரு'. தமிழர்கள், காயிறான்' என்பர். இது எகிப்து (மிசிரம்) நாட்டின் தலைநகர்.

4 ஹிந்துஸ்தான் — 'இந்தியா' நாட்டை இப்படியும் அழைப்பதுண்டு.

5 ஹிஜ்ரத் — நாடுவிட்டு நாடு சென்று குடியேறுவதை ஹிஜ்ரத்' என்பார்கள் அறபிகள்.

6 தவறியதாகக் கூறப்படும் முதற் கப்பல் அண்டார்டிக் பெருங் கடலிலுள்ள ஓர் இடத்தில் போகி சேர்ந்திருக்கக் கூடுமென்றும் சில வரலாற்று ஆசிரியர்கள் எழுதி வைத்துள்ளனர்.

7, 8, 9 — ஸூரத் மகாராஷ்டிராவிலும், கோக்கானூர், அச்சைநிருபம் கேரளத்திலுமுள்ள துறைமுகப் பட்டினங்கள்.

10 தூத்துக்குடி - தமிழகத்திலுள்ள ஒரு துறைமுகம்.

சேர்ந்தது. இது காயலில் அரபிகளின் இரண்டாவது குடியேற்றம். முதல் குடியேற்றம் கி. பி. 875-ல் நிகழ்ந்ததை முன்பே குறிப்பிட்டுள்ளேன்.

## சீனாவுக்குத் தமிழகத் தூதுவராக நியமிக்கப்பட்ட அறபி

பாண்டிய நாட்டின் வேந்தனாக இருந்த சுந்தர பாண்டிய தேவர் எகிப்திய[1] முஹாஜிரீன்[2] களுக்கு எல்லாவகையான ஒத்தாசைகளும் அளித்தார். செய்யிது ஜமாலுத்தீன் என்பவர் பெருமானார் (ஸல்) அவர்களின் பேரனார். கர்பலா[3] தியாகி இமாம் ஹுஸைன் (ரழி) அவர்களின் 21-வது வழித்தோன்றல். இவர் ஓர் அறிஞர். ஒரு வணிக வல்லவர். கூர்மை மிக்க ராஜதந்திரி. இவர் மீது மன்னருக்கு பெரு மதிப்பு இருந்தது. கி. பி. 1286 - ல் சீனாவுக்கு செய்யிது ஜமாலுத்தீனை தமிழகத்தின் எழுச்சி[4] யாக (தூதுவராக) அனுப்பிவைத்ததோடு மட்டுமன்றி, அவரின் தம்பி செய்யிது தகிய்யுத்தீனை தமது முதல் அமைச்சராகவும் நியமித்துக் கொண்டார்.

டாக்டர் கால்ட்வெல் பாதிரியார்[5] இச்சம்பவம் பற்றி தமது 'திருநெல்வேலி சரித்திர'த்தில் பின் வருமாறு எழுதியுள்ளார்:—

---

1 எகிப்து — தமிழர்கள் 'மிசிரம்' என்பர் 'சீனர் மிசிரம், யவனரகம் ... .." — பாரதியார்

2 'முஹாஜிரீன்' — அகதிகள்.

3 கர்பலா — கூபா நாட்டிலுள்ள ஒரு முற்றவெளி. யஜீதுடன் போர் தொடுத்து வீரமரணம் எய்திய இடமும் இதுவே.

4 தூதுவரை 'எழுச்சி' என்பர் தமிழர்கள்.

5 டாக்டர் கால்ட்வெல் பாதிரியார் தமிழ் முதறிஞர். நல்ல ஆராய்ச்சியாளர். இவருக்கு சென்னைக் கடற்கரையில் ஒரு சிலை எழுப்பப்பட்டுள்ளது.

"1286-ல் மாமன்னர் குப்லேகானுக்கு அன்பளிப்புகள் அனுப்பிய நாடுகளில், மாபர்[1] நாட்டின் பெயரும் சீன வரலாற்றில் காணப்படுகிறது. 1280-ம் ஆண்டிலும் தொடர்ந்து வந்த மற்ற வருடங்களிலும் 'மாப'ருடன் ராஜ தந்திர உறவுகள் பற்றி சீனாவிலுள்ள மூல ஏடுகளில் அபூர்வமானதான ருசிகரமிக்க சாராம்சங்களை பாதியார் என்ற வரலாற்று ஆசிரியர் கொடுத்துள்ளார். சுல்தான்[2]களாக இருந்த ஐந்து சகோதரர் பற்றியும் மாபரிலிருந்து மங்கோலிய அரசவைக்கு அனுப்பப்பட்ட சமலாதிங்[3] என்ற தூதுவர் பற்றியும் இவற்றில் குறிப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளன."[4]

## குதிரை வர்த்தக உடன்பாடு

செய்யிது ஜமாலுத்தீன் சீன நாட்டிலிருந்து திரும்பி வந்ததும், அவருக்கும் மன்னருக்குமிடையில் ஒரு வர்த்தக உடன்பாடு கை எழுத்தாயிற்று. 'வருடா வருடம் செய்யிது ஜமாலுத்தீன் பாண்டிய நாட்டுக்கு 11,400 குதிரைகள் ஏற்றுமதி செய்ய வேண்டும். ஒவ்வொரு குதிரைக்கும் மன்னர் 500 'சக்கி'[5] தங்கம் செலுத்துதல் வேண்டும்' என்பது ஒப்பந்த நிபந்தனை. செய்யிது ஜமாலுத்தீனை பாண்டிய

---

1 சீன வரலாற்றில் மாபர், மா - பாஹ் (Mapzrh) என குறிப்பிடப்பட்டுள்ளது.

2 சுல்தான் — மன்னர்.

3 சமலாதிங் — ஜமாலுத்தீனைச் சீனர்கள் இப்படி அழைப்பர்.

4 திருநெல்வேலி சரித்திரம்: 36 - வது பக்கம்.

5 சக்கி என்பது வெனிஸ் தேசத்து நாணயம். அரபு நாட்டு களஞ்சி என்ற மித்காலுக்கு இது சமம். ஒரு சக்கிக்கு ரூபாய் 4 சதம் 40 ஆகும்.

நாட்டின் முப்படைக்கும் முக்கிய தளபதியாகவும் நியமித்தார் மன்னர். பாண்டி நாட்டுக்கும் ஈழ நாட்டுக்கும் நடந்த போரில் செய்யிது ஜமாலுத்தீன் தலைமையில் ஒரு படை வந்து வெற்றி ஈட்டியதாகவும் வரலாறு கூறுகிறது. தமது நாட்டுக்கு அவர் புரிந்த பெரும் பணியை கௌரவிக்கும் முகமாக பழைய காயலில் ஒரு பகுதியை செய்யிது ஜமாலுத்தீனுக்கு அன்பளிப்பாக வழங்கினர் மன்னர். கி. பி. 1292-ல் சுந்தரபாண்டிய தேவர் காலமானர். அப்பொழுது செய்யிதுஜமாலுத்தீனின்பெயரும் புகழும் மிக உச்சத்தில் இருந்தது. பாண்டிய நாட்டின் சிம்மாசனத்துக்கு அவர் தெரிவுசெய்யப்பட்டார். அது முதல் அவர் மலிகுல் இஸ்லாம்[1] சுல்தான் செய்யிது ஜமாலுத்தீன் என அழைக்கப்படலானர். அவருடைய தம்பி செய்யிது தகிய்யுதீன் என்பவர் பிரதம அமைச்சராகப் பதவியைத் தொடர்ந்து வகித்தார்; அவரை மக்கள் வீர தீர பிரபு 'மலிகுல் அஃழம்'[2] என அழைத்தனர்.

## சுல்தான் ஜமாலுத்தீனின் ஆட்சியின் மாட்சி

செய்யிது ஜமாலுத்தீன் ஆட்சிக்கு வந்த சந்தர்ப்பத்தில் அவருக்கு 7000 மாட்டுச் சுமை தங்கம் நகை ஆபரணங்கள் கிடைத்தன[3]. கருணை மிக்க மன்னராக விளங்கினர். அனைத்துலக மன்னர்களு

---

1 மலிகுல் இஸ்லாம் — இஸ்லாமிய வேந்தன்

2 மலிகுல் அஃழம் — மாமன்னர்

3 ''செல்வம் எத்தனை உண்டு புவி மீதே — அவையாவும் படைத்த தமிழ் நாடு'' — இவ்வாறு பாரதியார் பாடினர். 13-வது நூற்றுண்டில் தென் பாண்டி நாட்டில் செல்வ வெள்ளம் எப்படி கரை புரண்டோடியது என்பதற்கு ஜமாலுத்தீன் பெற்ற செல்வத்தின் அளவு ஓர் எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது.

டனும் கடிதத் தொடர்பு கொண்டிருந்தார். உல கெங்கும் அவரின் பேரும் புகழும் எப்படி பிரகாசித் தன என்பது பற்றி சரித்திராசிரியர் வாஸிப் கொடுத்துள்ள குறிப்புக்கள் சான்றுகள் கூறுகின் றன. அவை வருமாறு:

"மலிகுல் அஃழம் தகியுத்தீன், மலிகுல் இஸ் லாம் ஜமாலுத்தீன் ஆகியோரின் பேரரசும் அதி காரப் பெருமையும் கீர்த்தியும் மாபரில் மாத் திரம் அன்று, ஹிந்துஸ்தானத்தில் பல பாகங் களிலும் மிகப் பிரபலமாக விளங்கியது. தொலை தூர நாடுகளிலுள்ள வேந்தர்கள் எல்லோரும் உறவுகளை வளர்த்து நேசத்தை ஏற்படுத்தி ஞர்கள். ஜமாலுத்தீனுக்கும் சுல்தான் அலி பின் ஹஸப்பருத்தீன் முவய்யிதுக்கு மிடையில் அறபியில் நடைபெற்ற கடிதத் தொடர்பு மூலம் அக்கால வேந்தர் ஜமாலுத்தீனை எவ் வாறு கௌரவமாக மதித்தனர் என்பது அறியக் கிடக்கிறது."[1]

செய்யிது ஜமாலுத்தீன் மகன் செய்யிது பக்ருத் தின் கி. பி. 1297-ல் சீனவுக்குப் பாண்டிய நாட் டின் தூதுவராக அனுப்பப்பட்டார். கி. பி. 1305 வரை அவர் அங்கு பணிபுரிந்தார். மலிகுல் அஃழம் செய்யிது தகியுத்தீன் கி. பி 1503-ல் காலமானுர். அவருடைய பதவிக்கு அவரின் மகன் சிறுஜுத் தீனும் அவருக்குப் பின் அவரின் மகன் நிஸாமுத்தீ னும் முதல் அமைச்சர் பதவி வகித்தனர். செய் யிது தகியுத்தீன் மரணமான அதே ஆண்டிலேயே

1 எச். எம். எலியட் எழுதி, 1871 ல் வெளிவந்த 'இந்தியா சரித் திரம்' புத்தகம் மூன்று; பக்கங்கள்: 45, 47, 52, 54, 91, 211, 518, 550, பார்க்க

செய்யிது ஜமாலுத்தீன் உலக பாதுகாப்புச் சபைக்கு[1] அழைக்கப்பட்டு மிகப் பெரு மதிப்புடனும் கௌரவத்துடனும் உபசரிக்கப்பட்டார். செய்யிது பக்ருத்தீன் சீனுவிலிருந்து திரும்பி வரும் வழியில் மாபர் கரையில்[2] காலமாகிவிட்டார். அவரின் கல்லறை அவரின் சிறிய தந்தை செய்யிது தகிய்யுத்தீனின் கல்லறைக்கு அண்மையில் அமைந்துள்ளது. கி. பி. 1306—ல் செய்யிது ஜமாலுத்தீன் ஷிருஸில்[3] மரணமானூர். ஓர் அழகிய கோரி அவருடைய சமாதிமீது எழுப்பப்பட்டு, அதில் அவர் நினைவாக ஓர் இரங்கற்பாவும் செதுக்கப்பட்டுள்ளது.[4]

## தமிழகத்தின் வகுப்பு ஒற்றுமை

'பாண்டிய நாட்டின் அறபிவேந்தர்' (An Arab King of Pandya) என்ற தலைப்பில் எனது கட்டுரை சென்னையிலிருந்து வெளிவரும் 'ஹிந்து'(Hindu)என்ற ஆங்கிலச் செய்தித்தாள் 25-8-40 இதழில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. பல அறிஞர்களும் வரலாற்று மாண

1 13-வது நூற்றுண்டில் பாரசிகக்குடா நாட்டில் ஓர் உலக பாதுகாப்பு சபை இருந்ததாக தெரியவருகிறது. உலக நாடுகளின் விவகாரங்களைச் சுமுகமாகத் தீர்க்கும் உலக அவைக்குத் தமிழக வேந்தன் ஒருவன் தலைமை தாங்கியதையும் வரலாறு கூறுகிறது.

2 இங்கு 'மாபர் கரை' — என்பதை காயல்பட்டினத் துறை எனக் கொள்க.

3 ஷிருஸ் — இது அக்கால பாரசிக குடா நாட்டின் தலை நகரம். இங்குதான் உலக பாதுகாப்பு பெருமன்றம் அமைந்திருந்தது.

4 எச். எம். எலியட் தமது நூலில் செய்யது ஜமாலுத்தீன் மரணம் பற்றி விரிவாக எழுதி அறபியில் செதுக்கப்பட்டிருந்த இரங்கற்பாவை அடியில் கொடுத்திருப்பதாக எழுதியிருக்கிறுர். ஆனுல், அது கொடுபடவில்லை. ஏனே விடுபட்டுவிட்டது

வர்களும் பாண்டிய நாட்டில் அறபிகள் ஆதிக்கம் வகித்ததை மறுத்து எழுதினர். சுந்தரபாண்டிய அரசவையில் முஸ்லிம்களுக்கு பலமிக்க செல்வாக்கும் அதிகாரமும் இருந்ததாக 13-வது நூற்றாண்டு வரலாற்று ஆசிரியர்கள் யாவரும் ஒருமுகமாக ஒப்புக்கொள்கின்றனர். தமிழகத்திலே ஹிந்துக்களும் முஸ்லிம்களும் மிக சிநேகமாக வாழ்ந்தார்கள் என்பதற்கு இதனடியிற் காணும் குறிப்புகள் சான்று பகர்கின்றன:

> மதுரையிலுள்ள மற்ற வேந்தர்களைவிட சுந்தர பாண்டியரைப் பற்றி நமக்கு அதிக தகவல்கள் கிடைக்கின்றன. மதுரை ஸ்தலபுராணம், திருத்தொண்டர் புராணம் ஆகிய நூல்களில் காணப்படும் பொருள் மிக்க தொகுப்புக்களிலிருந்தும் சிங்கள வரலாற்று ஆசிரியர்களும், இஸ்லாமிய சரித்திராசிரியர்களான வஸப் ரஷீதுத்தீன், அமிர் குஷ்ரு ஆகியோரும் தந்துள்ள தகவல்களிலிருந்தும் நிரம்பச் செய்திகள் கிடைக்கின்றன. சுந்தரபாண்டியர் பாண்டிய தலைமுறை அல்லது சோழ பாண்டிய தலைமுறையிலுள்ள கடைசி மன்னர் எனத் தெரிகின்றது. சுந்தரர் இறந்ததும் மதுரை அரசு முஹம்மதியர் வசமாயிற்று என்ற முஸ்லிம் சரித்திராசிரியர்களின் கூற்றுகள் இப்படியான சந்தர்ப்ப வாதங்களால் யதார்த்தம் என்றே கொள்ள வேண்டும். இதுபற்றி எல்லாக் கர்ண பரம்பரைக் கூற்றுக்களும் இஸ்லாமிய சரித்திராசிரியர்களின் அறிக்கைகளுக்கு ஒத்தே இருக்கின்றன. சுந்தரர் வாழ்ந்த காலத்திலேயே முஹம்

மதியர்கள்[1] மேலாதிக்கம் ஓங்கி நின்றது உண்மை.

—டாக்டர் கால்ட்வெல், திருநெல்வேலி சரித்திரம்: பக்கம் 32.

நெல்ஸன் கையேட்டில் கண்ட குறிப்புகளிலிருந்து கி. பி. 1573-ல் வீரப்பநாயக்கர் மதுரையிலுள்ள ஒரு மசூதிக்கு கூன்பாண்டியர் கொடுத்த நன்கொடை ஒன்றினை உறுதிப்படுத்தி ஓர் உறுதிப் பத்திரமும் எழுதிக் கொடுத்திருப்பதை அறிகிறோம். இதுவும் சுந்தரர் அரசவையில் முஹம்மதியர்களின் செல்வாக்கு மேலோங்கி நின்றதையே காட்டுகிறது.

## ஆராய்ச்சியின் மூலம் கண்ட உண்மைகள்

'ஸெர் மார்கோ போலோ' என்ற நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் கர்னல் ஹென்றி யூல் (Col. Henry Yule) என்ற பொறிஇயல் நிபுணர், இத்தாலி பூதத்துவ ராயல் பொறியியல் குழுவைச் சேர்ந்தவர். நூறு வருடங்களுக்கு முன் இவர் கொற்கை[2], மாராமங்கலம்[3], பழைய காயல்[4], புன்னைக்காயல்[5], காயல்பட்டணம்[6] ஆகிய இடங்

1 முஹம்மதியர் — முஸ்லிம்களை முஹம்மதியர்கள் எனத் தவருக அழைத்தனர். கிறிஸ்து நாதரைப் பின்பற்றியவர்கள் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்றும், தங்கள் மதத்தை கிறிஸ்தவ மதம் என்றும் அழைக்கின்றனர். அவ்வாறே பௌத்தர்களும். முஸ்லிம்கள் தாங்கள் முஹம்மது நபி (ஸல்) அவர்களைப் பின் பற்றியவர்களாயினும் தங்களை முஹம்மதியர்கள் என அழைத்துக் கொள்வதில்லை.

2, 3, 4, 5, 6 — முதல் மூன்று ஊர்களும் நெல்லை மாவட்டத்திலுள்ள ஸ்ரீவைகுண்டம் வட்டாரத்திலும், ஏனைய இரு ஊர்களும் திருச்செந்தூர் வட்டாரத்திலும் அமைந்தவை. ஒரு காலத்தில் காயல், புன்னைக்காயல், காயல்பட்டணம் இம்மூன்றும் சேர்ந்து ஒரே பட்டினமாக விளங்கியதாகவும் அறிகின்றோம்.

களுக்கெல்லாம் நேரிற் சென்று பார்வையிட்டு பலவாறு ஆராய்ந்து பல ருசிகரமான தகவல்களைக் கொடுத்துள்ளார். பேரறிஞர் கலாநிதி கால்ட்வெல் பாதிரியாரும் அவருடன் ஒன்றாகச் சென்று ஆய்வுத் துறையில் துணை நின்றார். மார்கோ போலோ இறங்கிய பழைய காயலில் ஒரு பெரிய வெறு நிலம் பரந்து கிடக்கிறது. இதை மக்கள் சூரன் காடு என அழைக்கின்றனர். இந்த இடத்தை நானும் வேறு சில ஆய்வாளர்களுமாக[1], 29-9-1940 ல் சென்று பார்வையிட்டோம். இந்த இடத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்தேன். இப்பொழுது அழிந்து கிடக்கும் சூரன் காடு ஒரு காலத்தில் பாண்டிய வேந்தன் அரசவை வைத்து நடத்திய இடம் என கர்னல் ஹென்றி யூல் கூறுகிறார். இது முழுக்க முழுக்க சரி என்பதே என் அபிப்பிராயம். வேறு சில வரலாற்று உண்மைகளைப்பற்றி இக்கிராம மக்களிடம் கேட்டு விளங்கியதாகவும் யூல் பெருமகனார் கூறுகிறார். காயலில் ஆட்சி புரிந்த சூர் ராஜா ஒரு முஸ்லிம் என்றும், அவர் தான் காயலின் கடைசி மன்னர் என்றும் அந்த ஊர் மக்கள் கூறியதாகவும் யூல் துரைமகனார் கூறுகிறார். காயலிலுள்ள மீனாட்சி கோவிலில் சூர் ராஜா வழங்கியதாகக் கூறப்படும் ஒரு செப்புப்பட்டயம் இருப்பதாகவும், இஃது அந்தக் கோவிலுள் பாதுகாத்து வைக்கப்பட்டிருப்பதாகவும், இதில் சூர் ராஜா வழங்கிய மான்யங்களைப்பற்றிய குறிப்புகள் இருப்பதாகவும், சூர் ராஜா ஒரு முஸ்லிம் என்றும் அந்தக் கோவில் மதகுரு உறுதிப்படுத்தியதாகவும்

---

1 சுல்தான் செய்யிது ஜமாலுத்தீன் வாரிச வழி வந்தவரும் எனக்கு மாமாமுறையுமான பிரபு நயினு சாஹிபு, சி. மு. க. நூ. சேகு முகம்மது, ஹாஜி சி. லெ. முகம்மது இபுறுஹீம், எம். கே முகம்மது இபுறுஹீம் சாஹிபு பீ. ஏ., பி. எல்., ஆகியோர் என்னுடன் வந்த ஆய்வுக் குழுவினராவர்.

ஹென்றி யூல் எழுதியுள்ளார். சூர் ராஜா என்ற பெயர் முஸ்லிம் பெயராகத் தொனிக்கவில்லைதான். ஆனால், ஊர் மக்களின் கூற்றில் உண்மை இல்லாமலிருக்கவும் முடியாது. சூர் ராஜா என்பது செய்யிது ஜமாலுத்தீனின் பட்டப் பெயராகவும் இருக்கலாம். சுல்தான் செய்யிது ஜமாலுத்தீன் வமிசத்தவர்கள் சிலருடைய கல்லறைகளில் நாட்டப்பட்டிருக்கும் கற்களில் ஷெண்பக முதலியார், பராக்கிரம பாண்டியமுதலியார், வீரபாண்டி முதலியார் இப்படியான பெயர்களும் பொறிக்கப் பட்டிருப்பதையும் காணலாம். ஜமாலுத்தீன் வேந்தனாக வருவதற்கு முன், ஒரு வர்த்தக நிபுணராகவும், பெரும்புகழ் கொண்ட ராஜதந்திரியாகவும், நாட்டின் சேனைத் தலைவராகவும், அறிஞராகவும் இருந்திருக்கிறார். ஆகையால், அவரை மக்கள் 'சூரன்' என அழைத்திருப்பார்கள். இப்பெயரால் சூரன் காடு ஏற்பட்டிருக்கலாம் என ஊகிக்க இடமுண்டு.

## தமிழ் பேசும் முஸ்லிம்களின் தந்தை நாடு

முன் கூறியபடி 'Moor' என்றும், 'சோனகர்' என்றும், 'துலுக்கர்' என்றும், 'மரைக்காயர்' என்றும் 'லெப்பை' என்றும், 'சோழியர்' என்றும், 'யவனர்' என்றும் அழைக்கப்படுகின்றவர்கள் யாவரும் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டு உலகின் பலதிக்குகளிலும் பரந்து வாழும் அறபி வழி வந்த முஸ்லிம்களேயாவர். தமிழ் முஸ்லிம்கள் என்றும், தமிழ் பேசும் முஸ்லிம்கள் என்றும் அழைக்கப்படுகின்றவர்களும் இவர்களேயாவர். இவர்களின் தந்தை நாடு தமிழகத்தின் நெல்லை மாவட்டத்திலுள்ள காயல்பட்டணம் என்பது சரித்திர ஆய்வாளர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. மார்கோ போலோ இப் பெரும் புகழ் கொண்ட நகருக்கு

இரு முறை வந்துள்ளார். கி. பி. 1288-ல் முதன் முறையும், கி. பி. 1293-ல் மறு முறையும் வந்துள்ளார். அனைத்துலக வர்த்தக கேந்திர இடமாக விளங்கிய நகரும் இதுவே. பற்பல வகையான தொழில்கள் இங்கு இருந்தன. கப்பல் கட்டுதல், பீங்கான் உற்பத்தி, நெசவு, முத்துச்சிலாபம் மற்றும் பல்வேறு தொழில்களும் இங்கிருந்தன. 'மஸ்லின்' துணி இங்கு உற்பத்தியாகி ஐரோப்பிய நாடுகளுக்கும் உலகின் பல்வேறு நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது. மறைந்த மாமேதை, பண்டித ஜவஹர்லால் நேரு தமது 'இந்தியாவின் கண்டுபிடிப்பு' (Discovery of India) என்ற நூலில் 194—வது பக்கத்தில் இந்த நகரத்தைப் பற்றிக் கொடுத்துள்ள தகவல் வருமாறு:

> ''டில்லி ஆதிக்கம் தெற்கே பரவியது. சோழ அரசு வீழ்ந்து, அதனிடத்தில் கடல் வலிமை மிக்க ஓர் ஆதிக்கம் ஏற்பட்டது. அதுதான் பாண்டிய ஆதிக்கம். மதுரை அதன் தலைநகரம். கிழக்குக் கரையிலுள்ள காயல்பட்டினம் அதன் துறைமுக நகரம். சிற்றரசுதான்; எனினும், வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்தது. மார்கோ போலோ சீனாவுக்குப் போகும் வழியில் கி. பி. 1288-ல் ஒரு முறையும், சீனாவிலிருந்து வரும்வழியில் கி. பி. 1293-ல் மறுமுறையும் காயல்பட்டினத்திற்கு வருகை தந்திருக்கிறார். அறபு நாடுகளிலிருந்தும் சீனாவிலிருந்தும் கூட்டம் கூட்டமாகக் கப்பல்கள் வந்துபோகும் பெரும் புகழும் பேரழகும் மாண்பும் பெற்றமாநகரம் இது என இதனை மார்கோபோலோ வர்ணித்துள்ளார். இந்தியாவிலே கிழக்குக் கரையோர ஊர்களிலே உற்பத்தியாகி இங்கிருந்து ஏற்றுமதியாகும்

சிலந்தி வலை போன்ற மிக மெல்லிய ரக மஸ்லின் துணி பற்றியும் அவர் குறிப்பிட்டுள்ளார்.''

இஸ்லாமிய வரலாற்று ஆசிரியர் இப்னு ஸைத் பின் வருமாறு எழுதுகிறார்:

''பிரயாணிகள் மாபரை மிகப் புகழ்ந்து கூறுவதுண்டு. 'லானு' என அழைக்கப்படுகின்ற ஒரு வகை 'மஸ்லின்' இங்கிருந்து ஏற்றுமதி செய்யப் படுகிறது. சலவைத் தொழிலும் சாயத் தொழிலும் இங்கு பிரமாதம்.''

## சோனகர் பட்டினம்—காயல் பட்டினம்

13-வது நூற்றாண்டிலுள்ள காயல் ஒரு மாபெரும் நகரம் எனலாம். தற்பொழுதுள்ள பழைய காயல், மஞ்சனக்காயல், புன்னைக்காயல், காயல்பட்டினம் ஆகிய ஊர்கள் அனைத்துமே ஒரே நகரமாக விளங்கியதாகக் கூறலாம். திருச்செந்தூர் வட்டாரத்திலுள்ள காயல்பட்டணத்திலிருந்து ஸ்ரீவைகுண்டம் வட்டாரத்திலுள்ள பழைய காயல் வரை நீளத்தில் அமைந்த ஒரு மாநகரம் இது. சென்னைப் பல்கலைக்கழக ஆதரவில் 1926-ல் பிரசுரமான தமிழ்க் கலைக்களஞ்சியத்தில் 'காயல்' என்ற வார்த்தைக்குப் பின்வருமாறு விளக்கம் தரப்பட்டுள்ளது:

''காயல் நெல்லை மாவட்டத்திலுள்ள ஒரு கிராமம். ஒரு காலத்தில் மிகப் புகழ்வாய்ந்த துறைமுகப்பட்டினம். தாம்பிரவர்ணி நதி சங்கமமாகும் இடத்தில் அமைந்த ஊர். மார்கோ போலோ இறங்கிய நகரம்.''

காயல் பட்டணத்திலிருந்து காயல் ஆரம்பமாவதாகப் பழைய காயல் ஸ்தல புராணம் கூறுகிறது. திரு ரா. பி. சேதுப்பிள்ளை தமது ''ஊரும் பேரும்'' என்ற நூலில் பின்வருமாறு கூறுகிறார்:

''காயல்பட்டணம் ஒரு அழகிய நகரம். சோனகர்பட்டினம் என்று இது முன்பு அழைக்கப் பட்டது''

தங்களுடைய பூர்வ நகரின் ஞாபகமாக காயல் பட்டணம் என்று இந்த நகருக்கு பெயர் வழங்கப் பட்டது என்றும், இதன் ஆரம்பப் பெயர் 'சோனகர்பட்டினம்' என்றும் காயல்பட்டணம் வாசிகள் கூறுவதாக டாக்டர் கால்ட்வெல் குறிப்பிடுகிறார். காயல்பட்டணத்துக்கு மிக அண்மையில் ஒரு கிராமம் உண்டு. அதற்குப் பெயர் சோனகன் விளை. அங்கே ஒரு பெரிய குளம் இருக்கிறது. அதற்குப் பெயர் துலுக்கன் குளம். 'தற்பொழுது இலங்கை என்று அழைக்கப்படும் 'ஸரந்தீ'புக்கு எதிரில் அமைந்த இடம் காயல்' என்று அப்துல் றஸாக் அவரது குவார்டர் மீர்ஸி (Quartermeres)ல் குறிப் பிடுகிறார். ''காயல் ஒரு முஸ்லிம் வேந்தனின் ராஜ்யம்'' என வாஸ்கோடிகாமா(Vasco De Gama) தமது ''ரொடெய்ரோ'' (Roteiro) வில் எழுதியுள்ளார், ஜியாவுனி எம்பொலி, டுவர்தமா, பர்பஸா, நிகோலோ கோண்டி ஆகிய சரித்திர மேதைகள் 'காயல் முத்துக் குளிக்கும் இடம்' என வர்ணித்துள்ளனர். காயல் என்ற வார்த்தைக்கு கடற்கழி அல்லது களப்பு என்பது பொருள். களப்பு ஓரத்தில் அமையும் ஊர்களுக்கு காயல் என்ற பெயர் ஏற்படுவதுண்டு. காயலில் நடைபெற்ற முத்து சிலாபத்தைப் பற்றி மார்கோ போலோ மிக விரிவான தகவல்கள் தந் திருக்கிறார். ஒவ்வொரு நாளும் இருமுறை குளித்

தல், நல்லகாரியங்களுக்கே வலக்கையையும், அரு வருப்பான காரியங்களுக்கு இடக்கையையும் உப யோகித்தல், உதட்டிற் படாமல் பாத்திரத்தில் நீர் அருந்துதல், பாத்திரம் கிடைக்காவிடின் கையைப் பாத்திரமாக உபயோகித்து நீர் அருந்துதல், போதை தரும் மதுவை ஒழித்தல், நீதியைக் கண்டிப் பாக நடத்துதல், குடிகாரர்களையும் கடலோடிகளை யும் பிணையாளர்களாக ஏற்றுக்கொள்ள மறுத்தல், சோதிடக்கலை, விண்கலை ஆகிய துறைகளில் அபாரஞானம்—இவையெல்லாம் மார்கோபோ லோவைக் கவர்ந்த தமிழக நாகரிகங்களிற் சில. இப் யான நற்பண்புகள் தம் சொந்தநாட்டில் இல்லாத தால் தமிழகத்திற் கண்ட இப்பண்புகள் அவருக்கு மிக விநோதமாகத் தோன்றி இருக்கலாம்.

## பாண்டிய அரசின் வீழ்ச்சி

செய்யிது தகியுத்தீன் கி.பி. 1300-ல் மரண மானார் என்றும், அவர் இறந்து சில மாதங்களில் செய்யிது ஜமாலுத்தீன் ஷிரூஸுக்குப் புறப்பட்டார் என்றும் முன்னர் குறித்தேன். அப்பொழுது அவர் மகன் செய்யிது பக்ருத்தீன் சீனுவில் இருந்தார். செய் யிது திகியுதீனின் மகன் செய்யிதுசிருஜுத்தீன் தந்த தைக்குப் பின் முதல் அமைச்சராகி செய்யிது ஜமா லுத்தீன் இல்லாத காலத்திலும் அவரே ஆட்சியை நடத்தி வந்தார். செய்யிது ஜமாலுத்தீனின் மகன் செய்யிது பக்ருத்தீன் சீனுவிலிருந்து கி. பி. 1305-ல் தமிழகம் திரும்பிய சந்தர்ப்பத்தில், தந்தை செய் யிது ஜமாலுத்தீன் ஷிரூஸிலிருந்தார். செய்யிது பக் ருத்தீன் 1305-ல் காலமானார். செய்யிது ஜமாலுத் தீன் கி.பி. 1306-ல்காலமானதும், நாட்டின் நிர்வாகப்

பொறுப்பைச் சுந்தரபாண்டிய தேவரின் சகோதரர் குலசேகரபாண்டியதேவர் ஏற்றுக்கொண்டார். குல சேகரபாண்டிய தேவர் முழுநாட்டையும் சீரும் சிறப்புமாக ஆட்சி செய்து வந்தார். அவர் அரசோச்சிய காலத்தில் மதுரை அரசாங்க பொக்கிஷ சாலையில் 1200 கோடி தங்கப் பேழைகள் இருந்ததாகக் கூறப்படுகிறது. குலசேகரதேவருக்கு இரு ஆண் மக்கள். ஒருவன் சுந்தரபாண்டிய தேவன் இவன் பட்டத்து ராணிக்குப் பிறந்தவன். மற்றவன் வீரபாண்டிய தேவன். இவன் வைப்பாட்டிக்குப் பிறந்தவன். வீரபாண்டியன் மிகவும் சாமர்த்தியமானவன்; சாணக்கியன்; ராஜதந்திரி. வீரபாண்டியனைப் பட்டத்து இளவரசனுக நியமித்தார் குலசேகர பாண்டியதேவர். இதனுற் கோபங் கொண்ட சுந்தர பாண்டியன் தந்தையைக் கொன்ற பின்னர் நாட்டைப் பலாத்காரமாகக் கைப்பற்றிக் கொண்டார். வீரபாண்டியனுக்கும் சுந்தரபாண்டியனுக்கும் சண்டை மூண்டது. இதில் வீரபாண்டியன் வெற்றி பெற்ருர். சுந்தரபாண்டியன் டில்லி மாமன்னன் அலாவுத்தீன் கில்ஜீ வசஞ் சென்று உதவி தேடினுன். டில்லி வேந்தன் தம் தளபதி மாலிக் கபூரை பாண்டி நாட்டை வென்று வர அனுப்பினுன்.

## தமிழ் முஸ்லிம் தளபதி

பாண்டிய நாட்டின் பிரதம சேனுதிபதியாக இருந்தவர் எகிப்திய வழிவந்த ஒரு தமிழ் முஸ்லிம். பாண்டிய நாட்டின் சேனுதிபதி ஒரு முஸ்லிம் என்பதை அறிந்த மாலிக் கபூருக்கு பெருமகிழ்ச்சி. பாண்டிய நாட்டுச் சேனுதிபதிக்கு ஓர் இரகசியத் தூது

அனுப்பினன் மாலிக்கபூர். பெரும் சலுகைகள் அளிப்பதாக வாக்களித்தான். பட்டம் நல்குவதாகவும் உறுதி அளித்தான்.

"நான் என் நாட்டுக்குத் துரோகம் செய்ய மாட்டேன், வாருங்கள், களத்தில் சந்திப்போம். வெற்றி அல்லது மரணம். இதுவே என் தாரக மந்திரம்."

—முழங்கினன் பாண்டிய சேனபதி இஸ்லாமியச் செம்மல்! அமீர் குஷ்ரு என்ற சரித்திராசிரியன் இம்மாவீரனை அரை காபிர்1 என பட்டம் சூட்டி வரைந்துள்ளான். இப்போர் பற்றி எழுதியவன் அமீர் குஷ்ரு. இப்படி அவரைக் குறைத்து எழுதியமை அவரின் தேசப்பற்றுக்குச் சான்றிதழாகும். போரிலே மாலிக் கபூர் வென்றன். வெற்றியின் நினைவாக கி. பி. 1310-ல் ராமேஸ்வரத்தில் ஒரு மசூதியைக் கட்டினன். அந்த மசூதி இப்பொழுது இருந்த இடந் தெரியவில்லை. ஆனல், கி. பி. 1300-ல் காயல்பட்டணத்தில் சுல்தான் செய்யிது ஜமாலுத்தீன் கட்டிய மசூதி இன்றும் அன்றுபோலப் புகழுடன் விளங்குகிறது. தமிழ் முஸ்லிம்கள் கட்டி எழுப்பிய சமத்துவத்திற்கும் சகோதரத்துவத்திற்கும், உயர் அன்புக்கும், உன்னத பண்பிற்கும் சின்னமாக இது விளங்குகிறது. இஸ்லாம் பலாத்காரத்தின் மூலமோ பகைமையின் மூலமோ பரவியதல்ல. சமாதானத்தின் மூலமும் அன்பின் மூலமும் பரவியதே இஸ்லாம். 9-வது நூற்றுண்டிலும், 13-வது நூற்றுண்டிலும் எகிப்திய அறபிகள் ஏற்றிய அறிவு ஒளி அன்பு ஒளி தமிழகத்திலும், இந்தியாவின் இதர மாநிலங்களிலும், இலங்கை, பர்மா, மலேசியா,

1 காபிர்:— இஸ்லாத்தை நம்பாதவர்.

சிங்கப்பூர், இந்துனைசுஷு மற்றும் தமிழ் பேசும் முஸ்லிம்கள் வாழும் நாடுகள் எங்கும் சுடர் விட்டுக் கொண்டிருக்கிறது. தமிழ் முஸ்லிம் இனத்தைக் கட்டி எழுப்புவதில் இஸ்லாமிய முனிவர்கள், சாதுக்கள், சித்தர்கள், மெஞ்ஞானிகள், துறவிகள், கவிஞர்கள், கலைஞர்கள், விஞ்ஞானிகள், தமிழ் அறபு மொழிகளின் இலக்கிய கர்த்தாக்கள், எழுத்தாளர்கள் மற்றும் பல்வேறு துறைகளிலும் ஈடுபாடுள்ள தமிழ் முஸ்லிம்கள் அனைவரும் தங்கள் பங்கை நன்கு நிறைவேற்றியுள்ளனர். ''தமிழ் முஸ்லிம்களின் பாரம்பரியம்'' என்பது ஒரு பெரிய விஷயம். இந் நூலிலே கையடக்கமான சில பகுதிகள் மட்டுமே தரப்பட்டுள்ளன.

●

# தமிழ் இலக்கியத்தில் முஸ்லிம்களின் பங்கு

தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு முஸ்லிம்கள் பெரும் பணியாற்றியுள்ளனர். உமறுப் புலவர், வள்ளல் சீதக்காதி போன்ற புலவர் - புரவலர் சிலரைப் பற்றிய தகவல்கள் மட்டுமே தமிழ் கூறும் நல்லுலகிற் பரவலாகத் தெரிகின்றன. ஏனையவர்களைப் பற்றிய தகவல்கள் பிரபலம் அடைந்தில.

அண்மையில், தமிழகத்தின் தலைநகரிலே நடைபெற்ற உலகத் தமிழ் விழாவிலே, இஸ்லாமியப் புலவர்கள் புரவலர்களுக்குரிய இடம் கொடுக்கப்படாமைக்குத் தமிழ் வளர்த்த முஸ்லிம்கள் பற்றிய ஆய்வு குறைவாகவே நிகழ்த்தப்பட்டமையும் காரணமாக இருக்கலாம். 'உலகெலாம் தமிழ் முழக்கம் கேட்க வேண்டும்' என ஆசைப்பட்டார் கவி பாரதியார். தமிழ் மொழி காக்கக் களம் குதிக்கவும் தீவிரம் பெற்றவர்கள் ஆட்சியில் அமர்ந்திருக்கும் வாய்ப்பைப் பெற்ற ஒரு சந்தர்ப்பத்தில் உலகத் தமிழர் விழா தமிழகத் தலைநகரில் நடைபெற்றிருக்கிறது. அதில் முஸ்லிம்கள் தமிழ் வளர்த்தது பற்றிய நினைவு மங்கி இருந்தமை இஸ்லாமியப் பெருமக்களுக்கு வருத்தந் தரவல்ல சம்பவமாகும்.

இற்றைக்கு இருபத்திமூன்று வருடங்களுக்கு முன், காயல் பட்டணத்திலே வள்ளல் சீதக்காதிக்கு ஒரு பெருவிழா எடுக்கப்பட்டது. அதற்கு நான் தலைமை தாங்கினேன். கட்டுரைப் போட்டியும் நடைபெற்றது. தேர்வுக் குழுவில் மூதறிஞர்களான ரசிகமணி டி. கே. சிதம்பரநாதமுதலியார், சீனிவாஸராகவன் எம். ஏ. ஆகியோர் நடுவர்களாக அமைந்தனர். பரிசு பெற்ற கட்டுரைகள் ராஜாஜி அவர்களின் ஆசியுடன் கல்கியிலும் மற்றும் பல சஞ்சிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டன. இவ்விழாவிற் கலந்து ஆய்வுரை நிகழ்த்தியவர்கள் பலர். அவர்களுள் முக்கியமானவர்கள் இருவர். தற்பொழுது முதல் அமைச்சராக இருக்கும் திரு. அண்ணாதுரை ஒருவர். மற்றவர் சென்னை பல்கலைக்கழக அறபி விரிவுரையாளர் டாக்டர் ஹுஸைன் நயினாராவர். சீதக்காதி வள்ளலின் வாழ்க்கையைத் திரைப்படமாக்கவும் ஆசைகொண்டார் திரு. அண்ணாதுரை அவர்கள். தமிழ் வளர்த்த முஸ்லிம்கள் பற்றி ஒரு ஆய்வு நூல் வெளியிட வேண்டுமென்ற ஆவல் முதன் முதலில் அப்பொழுதுதான் என் மனதில் உதித்தது. இளம் வயது. இலக்கியப் பசி அதிகம். சந்தர்ப்பமும் வாய்த்தது. பல நூல்களிலிருந்தும் தேனீக்கள் தேன் சேர்ப்பது போன்று சேர்த்தேன். முழுமையாக்குவதற்கு முன் குடும்பக் கடமையால் உந்தப்பட்டுக் கடல் கடந்து இலங்கை வந்தேன். இங்கு வெளிவரும் 'வீரகேசரி'யில் 'தமிழ் கூறும் முஸ்லிம் நல்லுலகம்' என்ற தலைப்பில் தமிழ் முஸ்லிம் புலவர் - புரவலர்களைப் பற்றி முப்பத்திரண்டு கட்டுரைகள் எழுதினேன். அரசு வெளியீடு அதிபரையே நிர்வாக ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் இளம்பிறையின் மறுபிரசுரத் திட்டத்தில் முதல் நூலாக, 1964-ல் அனைத்திலங்கை இஸ்லாமியக் கலை விழா

மலரில் வெளிவந்த 'தமிழ் வளர்த்த முஸ்லிம்கள்' என்ற தலைப்பில் அமைந்த என் கட்டுரை வெளி வந்தது.

ஓராண்டுக்கு முன் இங்கு வந்திருந்த ஓய்வு பெற்ற சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி அல்ஹாஜ் பஷீர் அஹமது ஸயீது அவர்கள், தமிழ் வளர்த்த இஸ்லாமிய புலவர்களின் ஏடுகளைச் சேகரித்து மறு பதிப்பு வெளியிட வேண்டுமென்றும், இக் கவிஞர் களுக்கு நிரந்தர நினைவுச் சின்னங்கள் ஏற்படுத்த வேண்டுமென்றும் விரும்பினார்கள். இலங்கை முஸ் லிம் எழுத்தாளர் சங்கத் தலைவன் என்ற முறையி லும், தமிழகத்தில் பிறந்தவன் என்ற முறையிலும் என் பங்கையும் விரும்பினார்கள். தமிழகம் சென் றும் எழுதினார்கள். தாயகம் செல்லும் சந்தர்ப்பம் ஏற்பட்டிருந்தால் உலகத் தமிழ்விழாவின் போது அண்ணா அவர்கள் தலைமையில் இக் கலைப்பணி ஆரம் பமாகி இருக்கலாம். நினைப்பதெல்லாம் நடப்பதில் லையே. கடந்த காலக் குறைவுகள் நமக்கு நிறைவு காணும் நல்வழியைக் காட்டுமாக. இதை நினைவிற் கொண்டு, எதிர்கால ஆராய்வாளர்களுக்கு உதவும் வகையிலே சில முக்கிய குறிப்புக்களை மட்டும் இவண் தெரிகுத்துத்தர விழைகின்றேன்.

○ பெயர், ஊர், முதலியன
○○ நூல்கள்
○○○ பிற முக்கிய குறிப்புக்கள்

1. சதுரகிரி மலையில் வாழ்ந்த யாக்கூப் முனிவர்*. சங்க காலப் புலவர் நக்கீரர் காலத்தவர் என்பர். ○

○○ பதினேழு வகை வைத்தியக் கலைபற்றி 'வைத்திய சிந்தாமணி' என்னும் வைத்திய வாகட நூல்.

இவர் ஒரு சித்தர். கெவுன குளிகையிட்டு, பறந்து பல நாடுகளையுஞ் சுற்றி வந்தவரென்பர். ○○○

சங்கப் புலவர் நக்கீரருக்குப் பல ஆண்டுகளாக இருந்த மூளை நோயைச் சுகப்படுத்தும் முகமாக, அறுவை வைத்திய மூலம் மூளையிலிருந்த தேரையை வெளியாக்கியமையால் இவரைத் தேரையர் எனவும் அழைத்தனர்.

2. ராமநாதபுர மாவட்டத்திலுள்ள ராஜகெம்பீரம் என்ற ஊரில் வாழ்ந்த கனக கவிராயர். ○

○○ இமாம் ஹுஸைன் (றழி) அவர்களுடைய வீர சரிதையைக் கூறும் 'கனகாபிஷேக மாலை'யை* இயற்றியவர். இந்நூல் ஹிஜ்ரி 1058-இல் இயற்றப்பட்டதென்பர்.

2791 பாக்களைக் கொண்ட இக்காப்பியம், ○○○
இஸ்லாமிய தமிழ்க் காப்பிய வரிசையில்
இடம் பெறத்தக்கது.

*கனகாபிஷேக மாலை:

ஐயிடையீக்கள் போலும், அளற்றிடை வேழம்போலும்
வெய்யதூண்டில் எனும் முள்ளை விழுங்கிய மீன்கள் போலும்
ஐயறு மனத்தீயோர்பால் அங்கடன் பட்டார் போலும்
நெய் அழல் மீதிற் போலும் நெஞ்சு நொந்துருகினுர்கள்.

3. கனக கவிராயர் மகஞன பீர்கான். ○
'நாளெட்டில் வென்ருன் புலவர்'
எனவும் அழைக்கப்பட்டார்.

○○○ அடைபட்டிருந்த ஆலயக் கதவினை, அறம் பாடி எட்டே நாளில் திறக்கச் செய்த காரணத்திஞல் இப் புனைபெயர் நிலைக்க லாயிற்று என்பர்.

4. நெல்லை மாவட்டத்திலுள்ள செவ்வல் ○
மா நகரிற் பிறந்த ஆலிப் புலவர்.
காயல்பட்டணம் காழி அலாவுத்தீன்
அவர்களிடம் பாடங் கேட்டவர்.

○○ ஹிஜ்ரி 998-இல் 'மிஃருஜ் நாமா'* என்ற காப்பியத்தை இயற்றினுர்.

ஹிஜ்ரி 1000-இல் றமழான் 27 இல் இறை ○○○
சாஷ்டாங்க (ஸுஜூத்) நிலையில் மரண
மாகி, அங்கேயே அடக்கஞ் செய்யப் பட்
டுள்ளார்.

*மிஃறுஜ் மாலை; நாட்டுப் படலம்:

காடுதோறும் கனகப் பெரும் பயிர்
வீடுதோறும் விருந்தும் வதுவையும்
நாடுதோறும் 'ஸலவாத்' திசை
கோடுதோறும் குயிலினம் கூவுமே.

5. தென்காசியிற் பிறந்த முதுபெரும் ○
கவிஞர் பீர் முஹம்மது நாயகம்.
திருவிதாங்கூர் ஆண்ட முத்துச்சாமி
தம்பிரான் காலத்தவர். மன்னர்,
நாயகத்தின் சீடர்களுள் ஒருவர்.

○○ காயல் பட்டினம் சதக்கத்துல்லா நாயகம்
அவர்களிடம் உரை கேட்டு,ஹிஜ்ரி 1022-ல்
'திருநெறி நீதம்'* என்னும் நூலை இயற்றி
னார்.

18,000 ற்கு மேற்பட்ட பாடல்களை இயற்றி ○○○
யுள்ளார். மாலை, குறவஞ்சி, நடனம்,
பதிகம் ஆகிய பல இலக்கிய வகைகளிலும்
பாடியுள்ளார். யானை மலையில் இவர் பதி
னைந்து ஆண்டுகள் தவமியற்றியமையால்
அப்பகுதி 'பீர் மேடு' எனவும் அழைக்கப்
படுகின்றது.

*திருநெறி நீதம்; நாட்டுப்படலம்:

நாடினுமதிய நாடு நகரினுக்கதிப நாடு
நாடிய பலன் கைகூடும் நபிகளும் பிறந்தநாடு
ஓடிய கதிர் மதி மீன் உலாவியே விலகும் நாடு
பாடியே தமிழ்க் கவிவாணர் பாட்டினிலடங்கா நாடே.

6. எட்டயபுரத்தில் ஹிஜ்ரி 1052 ○
ஷஃபான் 9-ல் பிறந்த உமறுப் புலவர்.
இவர் எட்டயபுரத்தில் வாழ்ந்து அங்
கேயே 1115 ரபீஉல் அவ்வல் 14-ல்
அடக்கஞ் செய்யப்பட்டவர்.

○○ காயல்பட்டண வாசிகளான சதக்கத்துல்லா நாயகம், முஹம்மது தீபி ஆகியோரிடம் பாடம் கேட்டுச் சீறுப்புராணம்* இயற்றினர். மற்றும் 'முதுமொழி மாலை', சீதக்காதிமீது 'திருமண வாழ்த்து' ஆகிய நூல்களையும் யாத்தனர்.

○○○ சீறுப்புராணம், 5027 பாடல்களைக் கொண்டது. எட்டயபுர அவைக்களப் புலவர்; கடிகை முத்துப் புலவரின் சீடர்; வால வாரிதி என்ற அகம்பாவப் புலவனை வாதிலே வென்றவர்; அறபி வழித்தோன்றல்.

*சீறுப்புராணம்; கடவுள் வாழ்த்து:

திருவினுந் திருவாய்ப் பொருளினும் பொருளாய்த்
 தெளிவினுந் தெளிவதாய்ச் சிறந்த
மருவினு மருவாய வணுவினுக் கணுவாய்
 மதித்திடாப் பேரொளி யனைத்தும்
பொருவினும் பொருவா வடிவினும் வடிவாய்ப்
 பூதலத்துறைந்த பல்லுயிரின்
கருவினுங் கருவாய்ப் பெருந் தலம் புரந்த
 கருத்தனைப் பொருத்துதல் கருத்தே.

7. காயல்பட்டணத்திற் பிறந்து, அங் ○
கேயே ஹிஜ்ரி 1121 றஜப் 21-ல்

சமாதியான மெஞ்ஞானி ஷாமு ஷிஹாபுத்தீன் நாயகம். இவர் சதக்கத்துல்லா நாயகம் அவர்களின் சகோதரர்.

○○ அறபுத் தமிழில் 1000ற்கும் அதிகமான பாடல்களை இயற்றியுள்ளார். றஸுல் மாலை, அதபு மாலை, நெஞ்சறிவு மாலை, தோகை மாலை, ஹதீது மாணிக்கமாலை*, நான்குயார்கள் மாலை முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார்.

ஆசாரங்கள் என்ற பெயரால் நடைபெறும் அனுசாரங்களை வன்மையாகக் கண்டித்து எழுச்சியூட்டிய புரட்சிக் கவிஞர். ○○○

*ஹதீது மாணிக்க மாலை:

பாலில் நீர்விட்டு வீற்பவரும் பதரை நெல்லுடன் கலப்பவரும்
காலியரிசினில் நீரிட்டோரும் கள்ளப் பணங்காசு செலுத்துநரு
மேலோன் 'லஃனத்'1 திலாகியென்றும் வேவு நரகத்தி லாவாரென்றும்
ஆலம்2 நபியுல்லா வும்மத்தி3 லே அறிவுள்ளோர் சிலர் எடுத்துரைத்தார்.

[1. லஃனத் - சாபம்; 2. ஆலம்-அகிலம்; 3. உம்மத்-கூட்டம்.]

8. காயல்பட்டணத்திற் பிறந்தவ ○
ரெனப் பல மூதறிஞர்களாற் பாடப்

பட்டவரும், கீழக்கரையில் வாழ்ந்து, அங்கேயே மரணித்தவரு மான செத்தும் கொடை கொடுத்த வள்ளல் சீதக்காதி. இயற் பெயர் செய்யிது அப்துல் காதிர் என்பதாகும். பெரும் புரவலர், சதக்கத்துல்லா நாயகம், உமறுப் புலவர் ஆகியோரின் சம காலத்தவர்.

○○○ வங்க கவர்னராக இருந்து, சேது நாட்டின் முதலமைச்சரானவர். காலும் கையு மில்லாத நொண்டிக் கவிஞன் இவர்மீது 'நொண்டிநாடகம்' இயற்றினர் என்பர். 'சீதக் காதி இறந்ததால் புலமையே இறந்துவிட்டது'' எனக் கையறம் பாடினர் படிக்காசுத் தம்பிரான். மற்றும் சுந்த சாமிப் புலவர், நமசிவாயப் புலவர், பூங் கோதை ஆகியோரும் இவர்தம் கொடைச் சிறப்புப் பற்றிப் பாடியுள்ளனர்.

படிக்காசுப் புலவர்; பலபாடற்றிரட்டு:

பூமாதிருந்தென்ன புவிமாதிருந்தென்ன இப்பூதலத்தில்
நாமாதிருந்தென்ன நாமுமிருந்தென் - நன்றுவலருக்கு
கோமான முகமர்மால் சீதக்காதி கொடை கரத்து
சீமான் இறந்திட்டபோது புலமையும் செத்ததுவே.

9. காயல்பட்டணத்திற் பிறந்த சேகாதி ○ நயினர் புலவர். இவர் வள்ளல் சீதக்காதி காலத்தவர்.

○○ 'திருமணக்காட்சி'யை இயற்றியவர். 947 விருத்தப்பாக்களைக் கொண்ட இவருடைய கவிக் களஞ்சியம் ஹிஜ்ரி 1122 இல் வெளியிடப்பட்டது.

10. கவிபெருமானுன உமறுப்புலவரின் ○ ஏக மகனுன கவிக்களஞ்சியப் புலவர். இவர் வண்ணக் களஞ்சியப் புலவரின் தந்தையுமாவர்.

○○ 'நபி அவதார அம்மானை' என்னும் நூலை இயற்றியவர்.

11. காயல்பட்டணத்திற் பிறந்து வாழ்ந்த ○ பனீ அகமது மரைக்காயர் புலவர்.

○○ இவர் காயல்பட்டணம் ஷெய்கு அலி லெப்பை ஆலிம் அவர்களின் அறபு மூலத்தைத் தழுவி 'சின்ன சீறு' வைப் பாடினுர்.

*சின்னசீறு'* 1869 விருத்தப் பாக்களிலே ○○○ நிறைவுறுவது. உமறுப் புலவர் இயற்றிய 'சீறுப்புராண'த்தின் தொடர்ச்சியாகத் தமது நூலினை நிறைவு படுத்திய பாவேந்தர்.

*சின்னசீறு; கடவுள் வாழ்த்து:

உண்மையாயுணர் வாய் வுணர் வொளியாய்
வொளிக்கு ளொளிவா யெங்கும்

அண்மையாய்ச் சேய்மையதா யருமையா
  யெளிமையதாய் யகிலத்தாளுய்
பெண்மையு மாண்மையு மலியுமல்லாத
  யெல்லாமாய் பேசற கொணுத
தன்மையா யெங்கு நிறைபரம் பொருளாகிய
  பதியைத் தாழ்ந்து வாழ்வாம்

○ 12. பனீ அஹமது மரைக்காயரின் மக ஞன செய்யிது அஹமது புலவர்.

'நூர் நாமா' என்ற நூலே இயற்றியவர். ○○

○○○ இந் நூலின் 'காஹிரி வளம்' என்னும் படலத்தில், காயல்பட்டணத்திலே கிள்ளேகளும் வேதம் படிக்கின்றன எனப் பாடிப் புகழ்ந்துள்ளார்.

13. காயல் பட்டணத்திற் பிறந்து கேரளத்தைச் சேர்ந்த பூவாரில் ஹிஜ்ரி 1156 றபீ உல் அவ்வல் 12-ல் அடக்கம் செய்யப்பட்டவரும், சதக்கத்துல்லா நாயகம், மஹ்மூதுதீபி நாயகம் ஆகியோரிடம் பாடங் கேட்டவரும், பல கலேகள் கற்றுத் தேறியவருமான புலவர் நூஹ் வலி நாயகம் அவர்கள். ○

○○ 474 தீந் தமிழ்ப் பாக்களிலே, பல பொருள்களிலும் ஞான வழி நின்று விளக்கம் தரும் 'வேத புராணம்'" என்னும் நூலே இயற்றியவர்.

பதினெட்டு மொழிகளிலும், பதினென்கு ○○○
கலைகளிலும் தேர்ச்சி பெற்றவர். பொன்
ஞனி அறபுக் கல்லூரியிற் பேராசிரியராக
இருந்தவர். அறபு-தமிழ் ஆகிய இரு
மொழிகளிலும் பெரும் புலவராக விளங்
கியவர்.

*வேத புராணம்:

தோத்திரமாம் பவளமொடு பளிங்கு போலே
இலங்கும் நீலமணிபோலே சுழிமுனைக்குட்
பாத்திரமாயிருக்கும் பெரியோர்கட்காகப்
பரமநபி குருவாக உலகில் வந்து
நேத்தியுடன் 'குபிர'றுத்தே யும்மத்தோர்க்கு
நினைவு கலங்காதிருங் களென்றே நன்ருய்
தேற்றி மனதுறைந்த இருபத்தி நாலுஞ்
சிவயோக ஞானமெனச் செப்பினர்.

14. காயல்பட்டணத்திற் பிறந்து, ஹிஜ்ரி ○
1177 துல் கஃதா 12-ல் மரணமாகிய
காஸிம் புலவர்.

∞ பெருமானர் மீது 'திருப்புகழ்' பாடியுள்
ளார்.

அருணகிரி நாதரின் 'திருப்புக'ழுக்கு ○○○
ஈடான நூலெனப் புகழப் பெற்றது
இவருடைய நூல். நூஹ்வலி நாயகம்
அவர்களின் பள்ளித் தோழர்; திருவடிக்
கவிராயரின்* மாணுக்கர்.

*திருவடிக்கவிராயர்:

வடிகட்டுச் சங்கத்தமிழ் புலவீரேழு வான்கடந்த
முடிகட்டழகர் திருப்புகழ் வாரி முகந்துகொண்டு
படிகட்டுலகப் பரப்பை யெல்லாஞ் சுற்றிப் பார்த்து
விண்மேற்
கொடிகட்டுத்தாவு நல் காஸிம் புலவர் கொழுங் கவியே

15. மதுரையில் வாழ்ந்த செய்யிது முஹம்மது அண்ணாவியார். இவர் ஜவாது புலவரின் ஆசானுமாவர். O

OO (அ) அலி நாமா (ஆ) பத்து புராணம் (இ) சாந்தாதியாகவமகம் (ஈ) நூற்நாமா ஆகிய நூல்களை இயற்றியவர்.

பால வயதிலேயே புலவராகித் துறவு பூண்டு, நாகூர் சென்று அங்கு ஒரு கலைக் கூடம் நிறுவி, மக்கள் பணி புரிந்தவர். OOO

16. எமனேச்வரத்தில் பிறந்து, பரமக்குடியில் ஹிஜ்ரி 1186-ல் மரணமான ஜவ்வாது புலவர். O

OO (அ) நாகைக் கலம்பகம் (ஆ) மதீனத்தந்தாதி (இ) முஹியித்தீன் பிள்ளைத் தமிழ் (ஈ) திருப்புகழ் ஆகிய நூல்களை இயற்றியவர்.

திருவாடுதுறை ஆதீன அதிபர் சோமசுந்தரம் தம்பிரானிடம் கற்று, ஏழாவது OOO

வயதிற் கவிஞரானவர். திருப்புகழை அரங்கேற்றக் காயல் பட்டணம் வள்ளல் கருத் தம்பி மரைக்காயரிடம் வந்தார். திருப்புகழை அவருடைய மக்கள் இசைக்க, தாம் கேட்டு, கொண்டு வந்த ஓலைச் சுவடியைப் பாக்கு வெட்டியால் நறுக்கி வீசியவர்.

17. செய்யிது முஹம்மது அண்ணாவியா ○ ரின் மூத்த மகனான ஜீவரத்னக் கவி. இயற்பெயர் செய்யிது மீருலெப்பை.

∞ (அ) மதீனக் கலம்பகம் (ஆ) வாள் விருத்தம் (இ) பரி விருத்தம் (ஈ) யானை விருத்தம் ஆகிய நூல்களை இயற்றியவர்.

18. நெல்லை மாவட்டத்திலுள்ள காலங் ○ குடி இருப்பில் வாழ்ந்த மீருன் கனிப் புலவர். ஐவாது புலவருக்குச் சம காலத்தவர்.

∞ (அ) கொம்பில்லா வண்ணக்கவி (ஆ) புகாரித் தங்கள் பிள்ளைத் தமிழ்.

19. பூவைமா நகரில் வாழ்ந்த ஹசனலி ○ புலவர்.

∞ ஹிஜ்ரி 1150 ல் 'ஐந்து படைப்போர்' என்னும் நூலைப் பாடினர்.

20. ஐயம் பேட்டையில் வாழ்ந்த மதார் ○
சாஹிபு புலவர்.

○○ ஹிஜ்ரி 1160-ல் மிஃருஜ் நாமா பாடினர்.

21. நவரத்தினக்கவி என அழைக்கப்பட்ட ○
காதிறு முஹிய்யிதீன்.

○○ 'பிக்ஹு மாலை'

செய்யிது முகம்மது அண்ணவியாரின் ○○○
இளைய மகன் வழி வந்த பேரன்.

22. 'அற்தான் மாலை' இயற்றிய மீரான் ○
கவி அண்ணவியாரின் மகனும்,
நாளெட்டில் வென்ருன் புலவரின்
கொள்ளுப் பேரனும், மதுரையில்
வாழ்ந்தவருமான மின்னு நூறுத்தீன்
புலவர்.

○○ பொன்னரிய மாலை

இசைக்கலையில், அவர் வாழ்ந்த காலத் ○○○
தில் ஒப்பாரும் மிக்காருமில்லாத் தனிப்
புகழ் பெற்றவர். யாழ் இசையிலும் வல்ல
வர்.

23. காயல் பட்டணம், தைக்கா சாஹிபு ○
வலி நாயகம் அவர்களின் தந்தையும்,
ஹிஜ்ரி 1163-ல் பிறந்த வருமான
உமறு வலி நாயகம்;

○○ 'ஞான ஒப்பாரி'* என்னும் நூலுடன், அறபியிலும் தமிழிலும் வேறு நூல்களும் இயற்றியவர்.

பல்கலைகளிலும் வல்லவர்; நல்லவர். ○○○

*ஞான ஒப்பாரி:

பொன்னாசை, மண்ணாசை, பெண்ணாசை மேவாமல்
தன்னாசையாலுனைந்து சார்ந்திருப்ப தெந்நாளோ?

24. குமரிமுனைக்கடுத்த கோட்டாற்றிலே ○
ஹிஜ்ரி 1167-ல் பிறந்த ஞானியார்
சாஹிபு.

○○ 'திருப்பாடல் திரட்டு'ம்*, ஞான சம்பந்தமான வேறு பல நூல்களும்.

உடலுழைப்பபை நம்பி ஜீவனம் நடத்தியவர். சேதுபதியும், திருவாங்கூர் வேந்தரும் இவரை நன்கு மதித்தனர். ○○○

*திருப்பாடல் திரட்டு:

முத்தமிழ் குருத்தே! மூதுரையறிவே! முழுமுதலான
மாமணியே!
சித்தெழும் பொருளே! உள்ளக விளக்கே! தேவனே!
தேவர் நாயகமே!
நித்தலு முனையே நினைவுறுமடியார் நினைவிலே
டெழுஞ்சுடர்வேந்தே!
அத்தனே! யடியார் சிரமதில் நடனம் ஆடுவாயமரர்
மாமணியே

25. கேட்டாற்றில் பிறந்து, நெல்லைக் ○
கடுத்த மேலப் பாளையத்தில் வாழ்ந்து
தேகவியோகமானவரும், முகம்மதசன்
புலவரின் மகனுமான செய்யிது
முஹியித்தீன் கவிராஜர்.

○○ (அ) முகியயித்தீன் ஆண்டவர் பிள்ளைத்
தமிழ் (ஆ) மாணிக்க மாலை (இ) நவநீத
புஞ்சம் (ஈ) முனாஜாத் ஆகியன இவர்
இயற்றிய முக்கிய நூல்களாம்.

மும்மொழிகளில் வல்லுநர். ○○○

26. தேங்காய்ப் பட்டினத்திலே வாழ்ந் ○
தவரும், திருமக்கா சென்ற காலை
ஹிஜாஸிலே மரண மானவருமான
குஞ்சு மூசுப் புலவர்.

○○ (அ) சையிதத்து படைப்போர்* (ஆ) இரவு
சுல்கூர் படைப்போர் (இ) அஜபு மாலை
(ஈ) தூதுரையின் மாலை (உ) சலவாத்து
மாலை ஆகிய நூல்களை இயற்றியவர்.

பதினெட்டு வாத்தியக் கருவிகளின் நுட் ○○○
பந் தெரிந்த இசைமேதை.

சையிதத்துப் படைப்போர்

முரசு, துந்துமி, திமிலை, பம்பைகள், முருடு, திண்டிமி,
மத்தளம்

குறை செய் பூரிகை, நவுரிகாகம், கொம்பு, மோகர,
வீணைகள்

பெருவணப்பறை, சின்னமுந்துடி, பேரி, கின்னரமும்,
தவில்
அரவம் மிஞ்சிய கடல் அமைந்திட ஆர்த்தடந்தன
சேனையே

27. குணங்குடி மஸ்தான் சாஹிபு என ○
அழைக்கப்பட்ட சுல்தான் அப்துல் காதிறு. ஹிஜ்ரி 1207-ல் பிறந்து கீழக்கரையில் அறபுக் கல்வி பெற்றவர். ஹிஜ்ரி 1254 ஜமாதுல் அவ்வல் 14-ல் சென்னையிலே மரணமாகி, ராயபுரத்தில் அடக்கஞ் செய்யப்பட்டுள்ளார்.

○○ சிய மங்கலம் அருணாசல முதலியார், திரட்டி வெளியிட்ட 1011 திருப்பாடல்களை* இயற்றியவர்.

புலவர் நாயகத்தின் ஒரு சாலை மாணாக்கர். ○○○
துறவறம் பூண்டு, பல்லாண்டுகளாக நிஷ்டையில் மூழ்கியிருந்தவர். ஏழு வருடங்களாகத் தலைகீழும், கால்கள் மேலுமாக மரக்கிளையிலே தொங்கி நிஷ்டையில் ஈடுபட்டவரென்பர்.

*திருப்பாடல்கள்; குருவணக்கம்:

இலங்கு மெஞ்ஞானப் பேரின்பக் கடலில் இன்னமு
தெடுத் தெமக்களிப்போன்,
பிணங்கிய கோசபாசமா மாயைப்பின்னலைப் பேர்த்தெறிந்
திடுவோன்,

வணங்கிய தவத்தினோர்க்கருள்புரிய வள்ளலாய் வந்த
மாதவத்தோன்
குணங்குடி வாழும் முகிய்யித்தீனுமென் குருபதம்
சிரத்தின்மேற் கொள்வாம்.

28. புலவர் நாயகம் என்ற சிறப்புப் பெயர் பெற்றிருந்த ஷெய்கு அப்துல் காதிறு நயினார் லெப்பை அவர்கள். இவரை மக்கள் ஷேக்னு லெப்பை ஆலிம் புலவர் எனவும் அழைத்தனர். சென்னையை அடுத்த கோவளத்திற் பிறந்தவர். 1268 துல்கஃதா 27-ல் மரணமாகிக் குணங்குடி மஸ்தான் சாஹிபு சமாதிக்கு அருகில் அடக்கஞ் செய்யப்பட்டுள்ளார். ○

○○ (அ) மக்கா கலம்பகம் (ஆ) நாகையந்தாதி (இ) கோத்திரமலை (ஈ) குத்புநாயகம்* (உ) புதூஹ் ஷாம் புராணம் (ஊ) சொர்க்க நீதி (எ) திருக்காரண புராணம் (ஏ) திருமணிமாலை (ஐ) சத்துரு சங்காரம் (ஒ) தரும ஷபா அத்து மாலை. (ஓ) முனுஜாத்துகள் (ஔ) சீட்டுக்கவி (அஅ) சித்திரக்கவி (அஆ) நாகபந்தம் (அஇ) கீர்த்தனை முதலிய நூல்கள்.

இவர் ஓர் ஆலிம்; ஹாபிஸ்; மஷாயிகு. பன்மொழி வல்லவர். தமிழ் ஒலி இலக்கண மேதை. நவீன அகஸ்தியர் எனப் பாராட்டப்பட்டவர். காயல்பட்டணம் பிரபல மாணிக்க வணிகர் ஹபீபு முஹம்மது மரைக்காயரின் திருமகன். ○○○

*குத்பு நாயகம்:

தாயுரை இகழ்ந்தனன் தந்தை மெய்க்குரு
வாயுரை இகழ்ந்தனன் வல்ல நாயகன்
தூயுரை இகழ்ந்தனன் தூதர் நந்நபி
ஆயுரை இகழ்ந்தனன் பாவியாயினேன்.

29. மீசலையிற் பிறந்து, இராஜ சிங்க மங்கலத்தைச் சேர்ந்த தும்பட்டிக் கோட்டையில் மரணித்த வண்ணக் களஞ்சியப் புலவர். ○

○○ (அ) இராஜநாயகம் [ஹிஜ்ரி 1223] (ஆ) தீன் விளக்கம் [ஹிஜ்ரி 1236] (இ) அலி பாதுஷா நாடகம் (ஈ) குத்பு நாயகம்.

இப்புலவருக்குத் தஞ்சை வேந்தர் சிங்க முகம் பொறித்த பொற் சிவிகையை அன்பளிப்பாகக் கொடுத்தான் என்பர். ○○○

30. காயல் பட்டணத்தில் ஹிஜ்ரி 1232ல் பிறந்து, கீழக்கரையில் வாழ்ந்த மாப்பிள்ளை லெப்பை ஆலிம். ○

○○ (அ) ஹத்யா மாலை* (ஆ) பத்ஹுத் தையான் (இ) பத்ஹுல் மதீன் (ஈ) பத்ஹுஸ் ஸலாம் (உ) மஆனி ஆகிய நூல்கள்.

தமிழுலகுக்கும் அறபுலகுக்கும் சதக் கத்துல்லா வழிநின்று பாலம் அமைத்த ○○○

வர். இவரது அறபு இலக்கியங்கள் கற்ளுேரால் மிகவும் பாராட்டப்படுகின் றன. தமது ஆசிரியப் பெருந்தகையின் திருமகளை இல்லாளாகப் பெற்ற இனி யர்.

'ஹத்யா மாலே:

கானலேத் தண்ணீரெனக் கருதி கண்ட பலனேது
தாகமல்லால்
மாணுர்க் கலவியர் பொருளாசையால் மயங்கித் தயங்கியே
புத்தியற்று
வீணுயுளறியே வாணுளெல்லாம் வெட்டி எழவுக்காய்த்
தேடித் தேடி
போனுர்கள் கோடி, கோடிகோடி போன இடமெங்கே
தடங்களெங்கே?

31. காலங்குடி இருப்பில் பிறந்தவரும், ○ புலவர் நாயகத்தின் சீடரும், மச்ச ரேகை சித்தர் என அழைக்கப்பட்ட வருமான ஐதுரூஸ் நயினுர் புலவர்.

○○ (அ) நவமணிமாலே* (ஹிஜ்ரி 1271) (ஆ) மச்சரேகை சித்தன் திருப்பாடல் (இ) விகடகவிகள்.

காயல்பட்டணம் தைக்கா சாஹிபு ○○○ நாயகம் அவர்கள் இப்புலவரை 'மஷாயிகு' [ஞானகுரு] என அழைத்தனர் என்பர்.

*நவமணி மாலை

பூவானறுசு முடையவனீ, பூவாய் நிலைத்த மெய்ப்பொரு ளீ
பூவானமைத்த நாயகன் நீ, பூவாயமைந்த பூரண நீ
பூவானுதியாய் புகழிறை நீ, பூவாய் விளங்கும் பேரொளிநீ
பூவானியெற்குன் கிருபை புரி கண்மணியே
றகுமானே

32. நாகூரில் ஹிஜ்ரி 1249ல் பிறந்த ○
குலாம் காதிறு நாவலர்.

○○ (அ) நாகூர் புராணம் (ஆ) ஆரிப் நாயகம் (இ) பகுதாத் கலம்பகம் (ஈ) மதீனக் கலம்பகம் (உ) கூவாலீர் கலம்பகம் (ஊ) பதாயிகு கலம்பகம் (எ) திருமக்காத் திரிபந்தாதி (ஏ) சமுத்திரமாலை (ஐ) மும்மணிக் கோவை (ஒ) பிக்ஹு மாலை முதலிய நூல்கள்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தாற் கௌரவிக்கப்பட்டவர். ○○○

33. காயல்பட்டணத்தில் ஹிஜ்ரி 1270ல் ○
பிறந்து, ஹிஜ்ரி 1310 வரை கலைப் பணி புரிந்த கண்ணகமது மொகுதூம் முகம்மது.

(அ) மக்கா பதிகம் (ஆ) பகுதாத் பதிகம் ○○
(இ) புதூஹுல் மிஸ்று முதலிய நூல்கள். மற்றும், அறுபதுக்கு மேற்பட்ட இஸ்லாமிய தமிழ் இலக்கிய நூல்களைச் சீர் செய்து புதுப்பித்துப் பதிப்பித்தவர்.

OOO சென்னைப் பல்கலைக் கழக இஸ்லாமியப் பிரிவின் தலைவராகப் பணி புரிந்தவர்.

34. ஆலிப் புலவர் பிறந்த செவ்வல்மா O நகரில், அவர் வழிப் பிறந்து, ஹிஜ்ரி 1376ல் சென்னையில் மரணமாகிய நயினார் முஹம்மது பாவலர்.

OO நளின மொழிமாலை இயற்றியதுடன், பல நூல்களுக்கு விரிவுரைகளும் எழுதியுள்ளார்.

35. திருப்புத்தூர் வித்வசிகாமணி O மஹ்மூது முத்துபாவாப் புலவர்.

OO பல மாலைகளையும் கீர்த்தனங்களையும் இயற்றியுள்ளார்.

ஈழத்து இலக்கிய வரலாற்றிலே சிறப்பிடம் பெற்றுள்ள அருள்வாக்கி அப்துல் காதிறுப் புலவரின் குரு. இவருடைய ஆசிரியர் 'சர்க்கரைக் கனி' ஞானவெண்பாப் புலிக் கவிராஜராவர். OOO

36. காயல்பட்டணம் செய்கப்துல் காதிறு O லெப்பை ஆலிம் ஹாஜி.

OO வெள்ளாட்டி மஸ் அலா

37. காயல் பட்டணம் அஹமது நயினர் லெப்பை ஆலிம். ○

○○ தாய் மகளேசல்

38. காயல்பட்டணம் ஹாபிஸ் முகம்மது அல்காஹிரீ. ○

○○ அறபுத் தமிழில் குர்ஆனுக்கு முதன் முதலாக விரிவுரை எழுதியவர்.

இந்த 'தப்ஸீர்' கி. பி. 1884-ல் பதிப்பிக்கப்பட்டது. ○○○

39. கீழக்கரை செய்யிது முஹம்மது ஆலிம் புலவர். ○

○○ (அ) குத்பு நாயக மான்மியம் (ஆ) ஏக தெய்வ ஸ்தோத்திர மாலை

இவர் ஹிஜ்ரி 1379-ல் மரணமானர் எனத் தெரிகிறது. ○○○

40. கீழக்கரை அப்துல் காதிறு லெப்பை ஆலிம். ○

○○ தரீகத்து, ஹகீகத்து மஃரிபத்து, தௌஹீது, ஸிற்று, திக்று, பிக்று, வுஜூது, ஷுஹூது, அதபு, பயான், ஷரீஅத்து— இவ்வாறு பல பொருள்கள் பற்றிய பாமாலைகள்.

41. காயல்பட்டணம் ஆலிம் பாழில் நூஹ். O

OO அறபுத் தமிழில் குர்ஆனுக்கு விரிவுரை (தப்ஸீர்).

ஹாபிஸ் முகம்மது அல் காஹிரீயை அடியொற்றி இவருடைய தப்ஸீர்கள் கி. பி. 1911-ல் வெளியிடப்பட்டது. OOO

42. நாகூர் செவத்த மரைக்காயர் சிர்யர். O

OO (அ) திருமணிமாலை (ஆ) பிக்ஹு மாலை

43. நாகூர் ஆரிப் நாவலர்.

OO (அ) நாகூர் பிள்ளைத் தமிழ் (ஆ) கையறு நிலை.

44. நாகூர் பிச்சை நயினுர் புலவர். O

OO புதூஹ் ஷாம் வசனம்

45. நாகூரைச் சேர்ந்த சுல்தான் புலவர். O

OO தறஜாத் மாலை.

இவருடைய நூல் ஹிஜ்ரி 1313-ல் இயற்றப்பட்டதாகத் தெரிய வருகின்றது. OOO

46. தென்காசியிலுள்ள வடகரையூரில் ○
வாழ்ந்த செய்யிது ஹனபிய்யா சாஹிபு
புலவர்.

○○ பிள்ளைத் தமிழ்

இந்தப் பிள்ளைத் தமிழ் நபி (ஸல்) பேரிற் ○○○
பாடப்பட்டது. கி. பி. 1883-ல் இந்நூல்
பதிப்பிக்கப்பட்டது.

47. தென்காசி றஸூல் பீவி.

○○ ஞானமிர்த சாகரம்

இவர் இஸ்லாமியப் பெண்பாற் கவிஞர் ○○○
என்பது கவனத்திற்குரியது. இந் நூல்
1910-ல் பதிப்பிக்கப் பெற்றது.

48. காயல் பட்டணம் சின்ன உவைசுனு ○
லெப்பை ஆலிம்.

○○ செய்யிது முகம்மது புகாரித் தங்கள்
ஆனந்தக் களிப்பு

49. கோட்டாறு சதாவதானி ஷெய்கு ○
தம்பீ பாவலர்.

○○ (அ) திருநாகூர் திரிபந்தாதி (ஆ) திருக்
கோட்டாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி (இ)

கோட்டாற்றுப் பிள்ளைத் தமிழ் (ஈ) கல்வத்து நாயகம் இன்னிசை மாலை (உ) காரணமாலை [சீறு நாடகம்] (ஊ) நாகைக் கோவை (எ) ஷம்ஸு தாஸீம் கோவை (ஏ) நாயக மான்மிய மஞ்சரி (ஐ) நீதி வெண்பா (ஒ) வேதாந்த விவகார கிரிமினல் கேஸ் (ஓ) சீறாப் புராண உரைப் பதிப்பு முதலிய பல நூல்கள்.

இவர் 74 வயதுகள் வரை உயிர் வாழ்ந்து ஹிஜ்ரி 1369 றபீ உல் ஆகிர் 25-ல் தேக வியோகமானார். OOO

50. கோட்டாறு செய்யிது அபூ பக்கர் புலவர். O

OO (அ) சீறு கீர்த்தனம் (ஆ) அபா யஸீதுல் பிஸ்தாமி.

சீறு கீர்த்தனம் ஹிஜ்ரி 1324-இலும் மற்றயது கி. பி. 1874-ம் ஆண்டிலும் பதிப்பிக்கப்பட்டன. OOO

51. கோட்டாறு செய்குபாவா செய்கு சுலைமான் புலவர். O

OO தொண்டி மோனகுரு மஸ்தான் சாஹிபு திருப்பாடல் திரட்டு

இந் நூல் கி.பி. 1922-ல் பதிப்பிக்கப்பட் ○○○
டது.

52. பள்ளப்பட்டி ஷெய்கு அப்துல் காதி ○
றுப் புலவர்.

அடைக்கல மாலை.

இந் நூல் கி. பி. 1874-ல் பதிப்பிக்கப்பட்
டது.

53. காலங்குடி இருப்பு மஹாவித்து
வான் மீரான் கனிப் புலவர்.

○○ செய்யிது முஹம்மது புகாரித் தங்கள்
பிள்ளைத் தமிழ்

54. ஜெகவீரராம மங்கலம் உமறு ஹஸன் ○
நயினு கலீபா சாஹிபு

○○ பிரபந்த கீர்த்தன பல ராகத் திரட்டு

இவர் ஜெகவீரராம மங்கலம் மீரு நயி ○○○
னர் புலவர் அவர்களுடைய மகனுவர்.
இவருடைய நூல் ஹிஜ்ரி 1312 றபீ உல்
அவ்வல் மாதத்திற் பதிப்பிக்கப்பட்டது.

55. திருப்பாலைக்குடி செய்தக் காதிப் புல ○
வர்.

முசல் ஈமான் கொண்ட காரணம். OO

OOO இந் நூல் கி. பி. 1888-ல் பதிப்பிக்கப்பட்டது.

56. சென்னையில் ஹிஜ்ரி 1376-ல் மரணித்த செவ்வல் நயினர் முஹம்மது பாவலர். O

OO (அ) நளின மொழிமாலை (ஆ) கஸஸுல் அன்பியா.

இவருடைய சமாதி மஸ்தான் சாஹிபு தர்காவிற்கு அண்மையிற் காணப்படுகின்றது. OOO

57. தற்கலை வண்ணமலை ஷெய்கு பீர் முகம்மது புலவர். O

OO தீதாறு மாலை.

இந் நூல் கி. பி. 1906-ல் பதிப்பிக்கப்பட்டது. OOO

58. ஹிஜ்ரி 1280இல் பிறந்த அரசங்குழி, பிச்சை இப்ருஹிம் புலவர். O

OO (அ) திருமதீனக் கலம்பகம் (ஆ) திருமதீனத் தந்தாதி (இ) திருமதீனத்து

வெண்பா அந்தாதி (ஈ) திருமதீனத்து யமகவந்தாதி (உ) திருமதீனத்துப் பதிற்றுப் பத்தந்தாதி (ஊ) ஆதம்மலைத் திருப்புகழ் (எ) நாகூர் பிள்ளைத் தமிழ் (ஏ) நத்ஹரொலி ஆண்டவர்கள் பிள்ளைத் தமிழ் (ஐ) மஹ்பூப் சுப்ஹானி மாலை (ஒ) முஹியித்தீன் ஆண்டவர் மாலை (ஓ) பகுதாது மாலை முதலிய நூல்கள்.

இவர் நாற்பத்தாறு ஆண்டுகள் ○○○ வாழ்ந்து, பல அரிய இலக்கிய சேவைகள் செய்து, ஹிஜ்ரி 1326 இல் மரணமானார்.

59. மேலப்பாளையம் உதுமா லெப்பை ○ கலீபா சாஹிபு புலவர்.

○○ முனுஜாதே பாத்திமா.

60. மேலப்பாளையம் சாகுல் ஹமீது புல ○ வர்.

○○ (அ) ரஹ்மான் பதிகம் (ஆ) பிள்ளைத் தமிழ் (இ) முஹிய்யித்தீன் ஆண்டவர் திருப்புகழ் (ஈ) மாணிக்க மாலை.

இந்நூல்கள் அனைத்தும் ஹிஜ்ரி 1324-ல் ○○○ பதிப்பிக்கப்பட்டன.

61. நெல்லை மாவட்டத்திலுள்ள குருவித் ○ துறை முகமது ஹம்சா லெப்பை புல வர்.

○○ (அ) அகந்தெளியு மாலை (ஆ) தீன்நெறிக் கும்மி.

அகந்தெளியுமாலை ஹிஜ்ரி 1334 ஷஃபான் மாதத்தில் வெளிவந்தது. ○○○

62. பவலிமா நகர் முகம்மது ஜான் சாஹிபு லெப்பை ஆலிம் புலவர். ○

○○ கஸஸுல் அன்பியா

63. நெல்லிக்குப்பம் அப்துல் றஹ்மான் புலவர். ○

○○ (அ) முஸ்லிம் அத்வைத மூலமொழி (ஆ) துஹ் பதுல் ஹிந்து (இ) கீமியாயே ஸஆதத்

64. நெல்லை மாவட்டத்திலுள்ள ஆழூர் பேட்டை அப்துல் காதிறு சாஹிபு புலவர். ○

○○ (அ) இரத்தின முஹம்மது காரண சரித் திரம்.

காரண சரித்திரம் கி. பி. 1894 இல் பதிப் பிக்கப்பட்டது. ○○○

65. சித்தாமணியூர் முத்து மீரு புலவர். ○

OO மஹ்பூப் காதல்

இந்நூல் கி. பி. 1896 இல் பதிப்பிக்கப்பட்டது. OOO

66. புரையாறு மீரான் கனி அண்ணாவியார். O

OO குறமாது.

67. நெல்லை மாவட்டத்திலுள்ள ரவண சமுத்திரம் மொன்னுன் முகம்மது காதிரி சத்தாரி. O

OO குலிஸ்தான் [பூங்கா].

இவர் சென்னையில் மரணமாகி, பெரம்பூரில் அடக்கஞ் செய்யப்பட்டுள்ளார். இவர் சீறாவின் இரண்டாவது பதிப்பினை வெளியிட்டார். OOO

தமிழ் வளர்த்த இஸ்லாமியப் புலவர்களுடைய தமிழ்ப்பணி தமிழகத்திலே மட்டும் முடங்கிக்கிடந்தது என்று கொள்வதற்கில்லை. இன்று, இலங்கையில், மூன்றுவது பெரிய இனமாக இஸ்லாமியப் பெருமக்கள் பெருமையுடன் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் இன்பத் தமிழ் மொழியையே தாய் மொழியாகப் பயின்று வருகிறார்கள். அவர்களுடைய முன்னோர்களிலும் புகழ் மிக்கப் பாவலராகப் பலர் அருந்தொண்டாற்றி வந்துள்ளார்கள். அவர்களுடைய இலக்கியத் தொண்டு ஈண்டு தனிப் பகுதியாகக் கீழே தரப்பட்டுள்ளது. வசதிக்காகவே இந்தப் பகுப்பு முறை வகுக்கப்பட்டுள்ளது என்பதையும், இது தரத்தினைப் பற்றிய பகுப்பு அல்ல என்பதையும் வாசகர் மனதில் இருத்திக் கொள்ளுதல் விரும்பத்தக்கது.

68. யாழ்ப்பாணம் சு. மு. சுலைமான் லெப்பை: ○

∞ குத்பு நாயகர் நிர்யாண மான்மியம்.

இந் நூல் கி. பி. 1900 ஜூலை மாதம் பதிப்பிக்கப்பட்டது: ○○○

69. யாழ்ப்பாணம் அசனார் லெப்பை புலவர். ○

○○ (அ) புகழ்ப்பாவணி (ஆ) குத்பு நாயக அனு சாசனம்.

அறபு - தமிழ் - ஆங்கிலம் ஆகிய மும் ○○○ மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்ற வர். எழுதுவினைஞர் சேவையிற் புகுந்த முதலாவது முஸ்லிம் என்ற பெருமையும் இவரையே சாரும். புகழ்ப்பாவணி ஹிஜ்ரி 1308 இல் பதிப்பிக்கப்பட்டது.

70. யாழ்ப்பாணம் ஹக்கீம் மீரு முகிய்யி ○ தீன் புலவர்.

○○ (அ) மஉ்றூதிய்யா பத்திரச கீர்த்தனை (ஆ) சன் மார்க்க இலகு போதனை (இ) வைத்திய நவரத்ன இலகு போதினி.

71. யாழ்ப்பாணம் சேகுதம்பி புலவர். ○

○○ சீறு நாடகம்.

இது ஹிஜ்ரி 1295 ஜமாதுல் ஆகிற் ○○○ மாதம் பதிக்கப்பட்டது.

72. யாழ்ப்பாணம் முஹம்மது அப்துல்லா ○ லெப்பை புலவர்.

○○ (அ) நல்வழி கீதை (ஆ) திரு நபிபுகழ் கீதம் (இ) குத்புநாயகர் பாமாலை.

73. யாழ்ப்பாணம் சுல்தான் தம்பிப் பாவலர். ○

○○ ஆரண முகம்மது காரணக் கும்மி

இவர் மாத்தறை முகம்மது காஸிம் புலவரின் குருவுமாவர். கி. பி. 1898-ல் தேக வியோகமடைந்தார். ○○○

74. யாழ்ப்பாணம் அப்துல்லா புலவர். ○

○○ (அ) குத்பு நாயகர் பாமாலை (ஆ) நல்வழிக் கவிதை (இ) சாகுல் ஹமீது நாயகர் புகழ் கீதம்

75. யாழ்ப்பாணத்தில் மரணித்த பதுருத்தீன் புலவர். ○

○○ முஹிய்யிதீன் மாலை

இப் புலவர் சென்னையிலே பிறந்து, ஈழத்தில் வாழ்ந்தவர். கி. பி. 1881-ம் ஆண்டிற் பதிப்பிக்கப் பெற்ற முஹிய்யிதீன் மாலை 4000 கவிதைகளைக் கொண்டது. ○○○

76. கண்டியை அடுத்துள்ள போபிட்டியாவில், கி. பி. 1866-ல் பிறந்த அருள் வாக்கி அப்துல் காதிர் புலவர். ○

18-9-1918-ல் தெய்யனவல என்ற இடத்தில் காலமானார்.

○○ (அ) சந்தத் திருப்புகழ் (ஆ) திருமதீனத்து மாலை (இ) ஞானப்பிரகாசமாலை (ஈ) சரம கவிக் கொத்து (உ) பிரான்மலைப் பதிகம் (ஊ) ஞானமணித் திரட்டு (எ) பிரபந்த புஞ்சம் (ஏ) நவமணி தீபம் (ஐ) சித்திர கவிப் புஞ்சம் (ஒ) பல வண்ணத் திரட்டு (ஓ) தேவிகாரப் பதிகம் (ஔ) திருபகு தாது அந்தாதி (அஅ) சலவாத்துப் பதிகம் (அஆ) காரணப் பிள்ளைத் தமிழ் (அஇ) மெய்ஞ்ஞானக் கோவை (அஈ) திருமயம் காட்டு பாவா சாஹிப் காரணக் கும்பி (அஉ) கண்டிக் கலம்பகம் (அஊ) மெய்ஞ்ஞானக் குறவஞ்சி (அஎ) கோட்டாற்றுப் புராணம் (அஏ) வழி நடைச் சிந்து (அஐ) கண்டிநகர்ப்பதிகம் முதலிய முப்பதுக்கும் மேற்பட்ட நூல்கள்.

இவர் கண்டி தர்ஹா வித்துவான்-மெய்ஞ் ஞான அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் என அழைக்கப்பட்டார். பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற் கூற்றிலும், இருபதாம் நூற்றுண்டின் முற் கூற்றிலும் இவர் புலவரேறுக வாழ்ந்தார். தமது 16-வது வயதில் ஞானவெண்பாப் புலிப்பாவலர் என்று விருது பெற்றுர். யாழ்ப்பாணம் பொன்னம்பலக் கவிராயருடனும் மதுரைத் தமிழ்ச் சங்கத்துடனும் நெருங்கிய தொடர்பு கொண்டவர். 'வித்துவதீபம்' என்ற விருது இராமாய ○○○

ணம், சீறுப்புராணம் ஆகியன பற்றி இவர் ஆற்றிய பிரசங்கங்களைக் கேட்ட யாழ்ப் பாண அறிஞராற் சூட்டப்பட்டது.

அருள் வாக்கி இயற்றிய விருத்தம்:

அத்துவி தத்தின் சோதி யடங்கலுமாகி
வெண்மை
முத்துரு வாகி மஞ்ஞை முதமறைக்
கனியாய்க் கிந்தீல்
சித்துரு வாகி ஆதம் சிரத் தொளி வாகி
யார்க்கும்
முத்தியின் வித்தாய் நின்ற முஹம்மது
நபியுல்லாவே.

77. பேருவளை ஷெய்கு முஸ்தபா வலி நாயகம். ○

○○ (அ) மீரான் மாலை (ஆ) மெய்ஞ்ஞானத் தூது

இவர் காயல்பட்டணம் உமறு வலிநாய கம் அவர்களின் சீடராவர். மீரான்மாலை ஹிஜ்ரி 1265-ல் வெளியாயிற்று. ○○○

78. பத்தொன்பதாம் நூற்றுண்டில் வாழ்ந்தவர் எனக் கூறப்படும் பேரு வளை அஹமது லெப்பை மரைக்காயர். ○

○○ மெய்ஞ்ஞானத் துதி

79. இயற்றமிழ் வித்துவான் அப்துல் மஜீத் புலவர். ○

○○ ஆசாரக் கோவை

இவர் கீழக்கரையிற் பிறந்தவரெனினும், ஈழத்தையே வசிப்பிடமாகக் கொண்டு புத்தளத்தை அடுத்த கற்பிட்டியிலே காலமானவர். ○○○

80. புத்தளத்தை அடுத்துள்ள காரைதீவில் வாழ்ந்த ஷெய்கு அலாவுத்தீன் புலவர். ○

○○ (அ) புலவராற்றுப்படை (ஆ) நவ வண்ணக் கீர்த்தனை (இ) சரநூல் (ஈ) வழிநடைச்சிந்து.

1885 ஆம் ஆண்டில் பிறந்து, 1938 ஆம் ஆண்டு வரை இவர் இலக்கியப் பணியாற்றியுள்ளார். ○○○

81. மட்டக்களப்பை அடுத்துள்ள காத்தான்குடியில் 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்ததாகக் கூறப்படும் அஹ்மது நயினார் புலவர். ○

○○ தீன் மாலை

82. காத்தான்குடி செய்யிது ஷக்காபுல் பாருல் பா அலவி மௌலானு. ○

○○ அருமறைச் சிறப்பும் ஆனந்தக் களிப்பும்

இவர் காத்தான்குடியைச் சேர்ந்த செய்யிது ஜெயின் பாறுல் பா அலவி மௌலானு வின் குமாரராவர். ○○○

83. காத்தான்குடி ஹமீது லெப்பை ஆலிம். ○

○○ கலிமாத் திறவுகோல்.

இந்நூல் 1930 ஆம் ஆண்டில் பதிப்பிக்கப் பட்டது. ○○○

84. மன்னுரை அடுத்துள்ள எருக்கலம் பிட்டி மீரன் முஹிதீன் ஆலிம் புலவர். ○

○○ நெஞ்சறிவுறுத்தல் மாலே

85. எருக்கலம்பிட்டி பக்கீர் புலவர். ○

○○ வெண்பாக்கள், பதங்கள், விருத்தங்கள், தோத்திரப் பாடல்கள், சரமகவிகள் ஆகிய பலவும் புனைந்துள்ளார்.

86. மக்கோனு அப்துல் ஹமீது மரைக்காயர். ○

தோத்திர புஞ்சம். OO

87. மாத்தறை முஹம்மது காசீம் புலவர். O

OO (அ) சர்வ சமயக் கீர்த்தனை (ஆ) இருள கற்றும் ஒளி (இ) கவிப் பரிவட்டம் (ஈ) முடியும் சிம்மாசனமும்.*

அறபு, தமிழ், சிங்களம் ஆகிய மும்மொழி களிலும் பாண்டித்தியம் படைத்தவர். 'புர்த்தா' என்ற அறபுப் பதத்தைக் கவிப் பரிவட்டம் என்று அழகுறுத்தத் தமிழாக் கியுள்ளார். சிங்கள மொழியிலும் காவியங் கள் படைத்தவர்.

*சிங்கள மொழி நூல் - ஒட்டுன்ன ஸஹ சிங்காசனய

88. திருக்கோணமலை ஷெய்கு மதார் புல வர். O

OO (அ) கன்னியாா வழி நடைச் சிந்து (ஆ) மீமன் கப்பல் கும்மி (இ) கண்டிப் பூந்தோட்டத்துச் சிந்து.

இவர் 1862 ஆம் ஆண்டிலே பிறந்து, 1913 ஆம் ஆண்டில் மறைந்தார். இவர் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் செயற் குழு உறுப்பினராகவும் இருந்தார். OOO

89. திருகோணமலை சீனிமுகம்மது புலவர். ○
இவர் ஷெய்கு மதார் புலவரின் சகோ
தராவர்.

○○ பல சாத்துக் கவிகளும், கீர்த்தனங்களும்.

90. கல்முனையை அடுத்துள்ள மருத ○
முனையிற் பிறந்த சின்ன ஆலிம் புலவ
ரென அழைக்கப்பட்ட இப்ருஹிம்
லெப்பை.

○○ (அ) மழைக் காவியம் (ஆ) ஞானரை
வென்றான்.

இவர் திருக்கோணமலையிற் காலமானு ○○○
ரென்பர். இவர் வாழ்ந்த காலம் பத்தொன்
பதாம் நூற்றாண்டாகும்.

91. மன்னார் பக்கீர் புலவர். ○

○○ சாந்த ரூபி நாடகம்

92. மூதூர் முஹிதீன் பிச்சைப் புலவர். ○

○○ (அ) நவரத்ன புராணம் (ஆ) கங்கை
காவியம்.

93. காலி காதிறு சம்சுத்தீன் புலவர். ○

oo (அ) புகாரி மாலை (ஆ) முஸ்தபாமாலை
(இ) முபாறக் மாலை (ஈ) தன்பீஹ்மாலை

94. நாவலப்பிட்டி அப்துற்றஹ்மான் புல o
வர்.

oo நாச்சியார் பதிகம்

இவர் ஆராய்ச்சியாகக் கடமையாற்றிய ooo
வர். தற்போதைய கிராம சேவகர் எனப்
படும் அரசாங்க உத்தியோகத்திற்குப் பதி
லாக அக்காலத்தில் ஆராய்ச்சிகள் நிய
மிக்கப்பட்டிருந்தார்கள்.

95. கலகெதர நூர் முகம்மது புலவர். o

oo (அ) திருமணி மாலை (ஆ) சன்மார்க்க
விஞவிடை.

96. தெல்தொட்டை ஆதம் லெப்பை o
புலவர்.

oo பத்று நாமா.

97. தெல்தொட்டை முகம்மது முஹிதீன் o
புலவர்.

o மங்கள வாழ்த்து

98. காஸி ஷெய்கு தம்பிப் பாவலர். O

OO காரணமாலை.

காரணமாலை 763 இசைப்பாடல்களால் ஆனது. இது கி. பி. 1878-ல் பதிப்பிக்கப் பட்டது. OOO

99. கண்டி ஷெய்கு முகம்மது லெப்பை ஆலிம் புலவர். O

OO தீன் மாலை.

இத் தீன் மாலை அறபுத் தமிழ் நூலாகும். இது கி. பி. 1878-ம் ஆண்டில் வெளியாயிற்று. OOO

100. அக்குறணை இஸ்மாயில் லெப்பை புலவர். OO

OO ஞானத் திருப்புகழ்.

101. கொழும்பு அப்துல் கனி சாஹிபு. O

OO ஞாஞந்தரத்தினம்.

102. கொழும்பு ஹம்ஸா லெப்பை புலவர். OO

○○ மெய்ஞ்ஞான ரத்தினவலங்காரக் கீர்த்தனம்.

103. கண்டி சாது பீர் பாவா சூபி. ○

○○ மெய்ஞ்ஞானப் பரிபூரணக் களஞ்சியம்.

104. அட்டாளைச்சேனை அப்துல் றஹ்மான் லெப்பை ஆலிம் புலவர். ○

○○ மணமங்கள மாலை.

105. அக்கரைப்பற்று வரகவி செய்கு மதார் புலவர். ○○

○○ ஒரு பா ஒரு பஃது.

106. அக்கரைப்பற்று முகம்மது ரூவிப் புலவர். ○

○○ ஞான ஒப்பாரி.

107. அக்கரைப்பற்று உமறு லெப்பை புலவர். ○

○○ கைப்புட்பச்சிசு மாலை.

108. ராகலே துவான் கிச்சில் ஜப்பார். ○

○○ மனோ ரஞ்சிதத் தெம்மாங்கு.

இவர் மலாய் சமூகத்தைச்சேர்ந்தவராவர். ○○○
தமிழைக் கற்றுத் தமிழிலே நூல் யாத்
துள்ளமை இவரது தமிழார்வத்தைப்
புலப்படுத்துகின்றது.

109. மாத்தளை செய்கு சுலேமானுல் காதிரீ. ○

○○ வேதாந்த விளக்கம்.

110. கொழும்பு ஹக்கீம் அப்துல் ○
ரஹ்மான்.

○○ காரண ரஞ்சித மஞ்சரி.

111. பேருவளை அஹமது லெப்பை மரைக் ○
காயர்.

○○ ஷெய்கு அஷ்ரப் ஒலிக்கும்மி.

112. சம்மாந்துறை இஸ்மாயீல் லெப்பை ○
புலவர்.

○○ [அ] மழைக்கவி [ஆ] தனிப்பாடல்.

113. ஒலுவில் செய்கு இப்ருஹீம் ○
மௌலானா.

○○ ஆஷிக் அவதாரமாலை

114. பொத்துவில் மீரு லெப்பை. ○

○○ மழைக் காவியங்கள்.

115. கொழும்பு வித்துவான் உ. அ. ○
அப்துல் கரீம்

○○ சந்தத் திருப்புகழுக்குச் சாத்துகவி.

இக்கவிதைகளை இவர் 1909-இல் அரங் ○○○
கேற்றினார் என்பர்.

நூற்றுப் பதினைந்து புலவர் பெருமக்களுடைய பெயர்களும், அவர்கள் இயற்றிய நூல்களின் விபரங்களும், மற்றும் கிடைக்கக் கூடிய பிற தகவல்களும் தரப்பட்டுள்ளன. என் ஆய்வின்போது இன்னும் நூற்றுக்குமதிகமான புலவர்களுடைய பாடல்கள் கிட்டின. ஆனால், சில பாடல்களை இயற்றிய புலவர்களுடைய பெயர்கள் கிடைக்கவில்லை. வேறு சில புலவர்களுடைய பெயர்கள் காணப்பட்டாலும், அவர்கள் இயற்றியதாகக் கூறப்படும் பாடல்களை இனங் கண்டு பிடிக்க முடிய

வில்லை. வருங்கால ஆராய்வாளர்கள் இத் துறையிலே புதிய தகவல்களைச் சேகரித் துத் தருவார்களென நம்புகின்றேன்.

வேறு சில புலவர்களுடைய பெயர் களும், அவர்கள் இயற்றிய நூல்களின் விபரங்களும் கிடைத்துள்ளன. ஆனால், அவர்கள் எங்கு பிறந்தார்கள் எங்கு வாழ்ந்தார்கள் என்பன போன்ற தகவல் கள் கிடைப்பதாக இல்லை. இருப்பினும், அவர்களுள் முக்கியமான பதினைந்து புல வர்களுடைய பெயர்களையும், அவர்கள் இயற்றிய நூல்களின் பெயர்களையும் இங்கு பட்டியல் சேர்த்து, இந்நூலின் இப்பகுதியைப் பூரணப்படுத்த விழை கின்றேன்.

116. வண்ணப் பரிமளப் புலவர்*

ஆயிரம் மஸ்அலா

*இப் புலவர் பெருமகன் உமறுப் புல வருக்கு முந்தியவர் எனத் தெரிகின்றது. இவருடைய நூல் மதுரைத் தமிழ்ச்சங்கத் தில் ஹிஜ்ரி 980-ல் அரங்கேற்றப்பட்டி ருக்கலாம் என நம்பப்படுகின்றது.

117. மீரான் சாஹிபு புலவர்

றஸூல் நாயகம் பிள்ளைத் தமிழ்

118. பீர்முகம்மது புலவர்.

[அ] நபிநாயகம் பிள்ளைத் தமிழ்

[ஆ] மதுர வாக்கிய கீர்த்தனை ரஞ்சிதம்

119. முகம்மது நூறுத்தீன்.

மூசா நபி புராணம்

120. ஷெய்கு மீருன் புலவர்.

பாத்திமா நாயகி பிள்ளைத் தமிழ்

121. அப்துல் காதிறு புலவர்

[அ] முஹியித்தீன் ஆண்டவர் காரணப் பிள்ளைத் தமிழ்

[ஆ] அடைக்கல மாலை

122. ஷாஹுல் ஹமீது புலவர்

[அ] நாகூர் பிள்ளைத் தமிழ்

[ஆ] ஏசல் கண்ணிகள்

[இ] தாய் மகளேசல்

[ஈ] சங்கீத சிந்தாமணி

123. சொர்ண கவி நயினு முஹம்மது பாவா புலவர்

ஷெய்கு தாவூது ஒலியுல்லா பேரில் பிள்ளைத் தமிழ்

124. முகம்மது ஹம்ஸா லெப்பை

அகந்தெளியு மாலை

125. செய்த காதி புலவர்

அபூஷஹ்மா மாலை

126. பக்கீர் மதார் புலவர்

[அ] ராஜமணிமாலை [ஆ]முஹிய்யிதீன் மாலை

127. ஷெய்கு லெப்பை

தமீம் அன்ஸாரி மாலை

128. காதிறு முஹிதீன் புலவர்

நஸீஹத்துல் முஃமினீன் மாலை

129. கொத்தலஹான் புலவர்

பலுலூன் அஸ்ஹாபி மாலை

130. ஹக்கீம் முகம்மது அப்துற் றஹ்மான்

சுல்தான் இப்ருஹிம்பின் அத்ஹம்
காரணமாலை.

இக் காலத்தில் வாழ்கின்ற தமிழ் முஸ்லிம் கவிஞர்களைப் பற்றி நான் இந்த நூலிலே காரணமாகத்தான் பிரஸ்தாபிக்கவில்லை. தமிழ் முஸ்லிம் கவிஞர்களிடையே கவிதா ஊற்று சற்றேனும் தடைப்படாத முறையிலே, இன்றளவும் கரை புரண்டோடிக் கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். கவிதைத் துறையில் பெரும் புகழ் கொண்ட மதுரைக் கவிஞர் ம. கா. காதிறு முகிதீன் மரைக்காயர், சாரண பாஸ்கரன், ஈழத்தின் ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலத்தின் கவிதைக்கான ஆயிரம் ரூபாய் பரிசு பெற்ற கவிஞர் அப்துல் காதிறு லெப்பை, 'காதற் கவிதைக்கோர் அண்ணல்' என்று போற்றப்படும் எம். எஸ். எம். சாலிஹ் ஆகிய பல நூற்றுவர் இப்பொழுது தமிழில் இனிய கவிதைகளைப் படைத்துத் தமிழ்க் கவிதைச் சோலைக்கு மணமூட்டி வருகிறார்கள். வளர்ந்தவர்களுமிருக்கிறார்கள்; வளர்ந்து வருபவர்களுமிருக்கிறார்கள்; வருங்காலத்தில் வளர வல்ல துடிப்புள்ள இளைஞர்களும் இருக்கிறார்கள் இவர்களுடைய பெயர்களைப் பட்டியல் தொகுப்பது நேர்மையான இலக்கிய விமர்சனமாகாது. கடந்த காலப் புலவர்கள் என்ற ஆராய்ச்சி என்ற எல்லையுடன் நான் நிறுத்திக் கொள்வது விரும்பத்தக்கது போலவே, சமகாலப் புலவர்களுடைய ஆக்கங்களைப் பற்றிய விரிவான நூல்கள் வெளிவருதலும் விரும்பத்தக்கது. இதனைத் தமது பணிகளுள் ஒன்றாக இளைய சமுதாயத்தினர் கணித்து, எனது சுமையையும் பங்கிட்டுக் கொள்ள முன் வருவார்களென நம்புகிறேன்.

Muslim Thamil Parampariyam

Alhafiz M. K. Syed Ahmed

தாய்:

பாதிமா நாச்சி ஹாஜி

தந்தை:

அல்ஹாபிஸ் செ. யி. முஹம்மது
அப்துல் காதிறு ஹாஜியார்

பிறப்பு:

26-3-1915, காயல்பட்டணம்

தலைவர்:

முஸ்லிம் எழுத்தாளர் சங்கம்
கொழும்பு இலக்கிய வட்டம்

துணைத் தலைவர்:

அனைத்திலங்கை எழுத்தாளர்
கூட்டமைப்பு

Editor:

Scientific Farming (1960)
(English, Tamil & Sinhalese)

நெல்லை ஜில்லா போர்ட் உறுப்பின
ராகப் பதவி வகித்தவர் (1956)

Executive Member:

Royal Agricultural and Food
Exhibition, Industries Section
(1956)

Member:

Royal Asiatic Society

பிற நூல்களும், ஆய்வுக் கட்டுரைகளும்:

வான்புகழ் காயல்பட்டணம்
மாசில்லாமணி மஹ்பூப் சுப்ஹானி
வள்ளல் சீதக்காதி
தமிழ் வளர்த்த முஸ்லிம்கள்
விஞ்ஞானமும் தொழில்களும்
தமிழ் கூறும் முஸ்லிம் நல்லுலகம்
An Arab King of Pandya
Suzerainty of Arabs over Chola-Pandya
வேறு பல

ARASU PUBLICATIONS

Printed at The Rainbow Printers,
231, Wolfendhal Street, Colombo-13.